Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | மாசி 18 வியாழக்கிழமை (02.03.2006) | தொலைபேசி 222 3378 | ஒலி 73

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# துணைப்படைகளின் செயற்பாடுகளை இராணுவம் தெளிவுபடுத்த வேண்டும்

## க.கா.குழுத்தலைவர் வேண்டுகோள்

(கொழும்பு)

துணைப்படைகள் இயங்குகின்றன என்பதில் சந்தேகமே யில்லை. இவ்விடயத்தில் அரசபடையினர் உண்மையை கூற வேண்டும். இவ்வாறு ஓய்வுபெற்றுச் செல்லும் கண்காணிப்பு குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

ஜெனீவா பேச்சுக்களின் பின்னர் கருத்து தெரிவித்த இராணுவ அதிகாரியொருவர் அவ்வாறான குழுக்கள் எதுவும் கிழக்கில் இயங்குவதற்கு சான்றுகள் இல்லை எனத்தெரிவித்திருந்தார்.

இது பற்றி தெரிவிக்கையிலேயே ஹொக்லண்ட் மேற்படி தனது கருத்தை தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அயல் வீட்டுக்காரியை குத்திக்கொன்ற பெண்

### கொக்குவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அயல் வீட்டுப்பெண்ணின் கத்திக்குத்துக்கு இலக்காகி குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது அதே இடத்தைச் சேர்ந்த தங்கவேல் அன்னலட்சுமி (வயது 50) என்பவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இவரது மகள் தங்கவேல் தயாளினி (வயது 21) கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது;அயலில் உள்ள இரு வீடுகளில் வசித்து வந்த இவர்களுக்கு இடையில் நீண்ட நாட்களாக வீட்டுக் கேற் தொடர்பில் கருத்துவேறுபாடுகள் காணப்பட்டு வந்ததாகவும் நேற்று அது கத்திக்குத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை குறித்து விளக்க நாளை மாலை சர்வகட்சிமாநாடு

ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து அரசியல் கட்சிகளுக்கு விளக்கமளிக்கவும் மேலதிக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் நாளை சர்வகட்சி மாநாட்டினைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நாளை மாலை 5 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் சர்வகட்சி மாநாடு நடைபெறவுள்ளது.

ஜெனீவாவில் அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் எதிர்நோக்கியிருக்கும் சவால்கள் தொடர்பாகவும் தெற்கிலிருக்கும் அரசியல் கட்சிகளுக்கு விளக்கமளித்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீம் மீதானதடை நேற்று நீக்கப்பட்டது

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனு தயாரிப்பு மற்றும் கையெழுத்திடுவதென்பது தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத்தடை உத்தரவு நேற்று நீக்கப்பட்டது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப்ஹக்கீம் மற்றும் அதன் பொதுச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவாப்பேச்சின் அடிப்படையிலேயே அடுத்தகட்ட நகர்வுகள் ஏற்படுத்தப்படும்

### நோர்வேத் தூதரகச் செயலாளர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் ஜெனீவாவில் காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் அடுத்த கட்டப்பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என்று இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் ரொம்நெர்ஸ்சொக் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாப்பேச்சுவார்த்தையில் இலங்கையில் வாழும் மூன்று சமூகங்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்ட நிலையில் அது குறித்து கவனம் செலுத்தப்பட்டன.

யுத்தம் மூலம் நிரந்தரத்தீர்வினை ஏற்படுத்த முடியாது என்பதை உணர்ந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவாக் கூட்டறிக்கை திரிபுபடுத்தப்படுகிறது

### அன்ரன் பாலசிங்கம் அரசுக்குக் கடிதம்

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுக்களின் இறுதியில் வெளியிட்ட கூட்டறிக்கையை திரிபுபடுத்துவதற்கும் தவறாக அர்த்தப்படுத்துவதற்குமான முயற்சிகளை அரசுமேற்கொள்கின்றது.

இது இருதரப்பினருக்குமிடையேயான பரஸ்பர நம்பிக்கையை ஊறுபடுத்துவதுடன் சமாதான நடவடிக்கைகளையும் மோசமாகப் பாதிக்கும் என விடுதலைப்புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்துவெளிவரும் டெயிலிமிரல் பத்திரிகைக்கு அரச பேச்சுவார்த்தைக்குழுவின் உறுப்பினரான சட்டத்தரணி ஏச்.எஸ்.டி. சில்வா வழங்கிய அறிக்கையில் போர்நிறுத்த ஒப்பந்தம் திருத்தப்பட்டுள்ளதென்று மிகைப்படுத்தப்பட்ட விதமாக தெரிவித்துள்ளார்.

அவர் முன்வைத்திருக்கும் வாதங்கள் முட்டாள்தனமானவையும்பல வீனமானவையும் ஆகும். அவரின் தர்க்கத்திற்கு வலுவூட்டு வனவாக வாதங்கள் இல்லை.

ஜெனீவாவில் பேசப்பட்ட விடயங்களும் தரப்பினரால் நிறைவேற்றுவதற்கென்று ஒப்புக்கொண்ட பொறுப்புகளும் மூல ஒப்பந்தத்தில் குறிப்பாக தெரிவிக்கப்பட்டிராததென்பதை தனது பிரதான கருத்தாக கொண்டு சில்வா வாதிடுகின்றார்.

அதனால் கூட்டறிக்கை ஒரு திருத்தமே என கூறுகிறார். இவரது வாதம் செல்லுபடியாகும் தன்மையற்றதும் ஏற்றுக்கொள்ளமுடியாததும் ஆகும்.

ஏனெனில் பொறுப்பேற்கப்பட்ட விடயங்கள் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களும் அதன் நோக்கங்களுள் அடங்குவனவும் ஆகும் என அன்ரன் பாலசிங்கம் அரசிற்கு தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்களைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் அமைச்சர்களுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

அமைச்சர்களாக இருந்த காலத்தில் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை மீளக்கையளிக்காமை தொடர்பான குற்றச்சாட்டுக்கு இலக்காகி இருக்கும் முன்னாள் அமைச்சர்கள் மூவரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் எல்.லியானாராட்சி உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர்களான டாக்டர் ஜெலத் ஜெயவர்த்தன , பெ.சந்திரசேக (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டங்களுக்கு முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பு இல்லை

(கொழும்பு)

எந்தவொரு கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளாமல் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்களின் விசேட கூட்டம் , உள்ளூராட்சி தேர்தல் வேட்பாளர்களின் மாநாடு என்பவற்றுக்கு தனக்கு அழைப்பு தரப்படுவதில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி என்ற ரீதியில் அதன் கட்சியின் பிரதான செயலாளர் அமைச்சர் மைதிரி பால சிறிசேனவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 2 ஆயிரம் பேருக்கு அழைப்பிதழ் அனுப்பிய பின்னர் இறுதிச் சந்தர்ப்பத்தில் தமக்கு அது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

தமது தலைமைத்துவத்தின் கீழ் கட்சியினால் நியமிக்கப்படுகின்ற தேசிய வேட்பு மனுக்குழுவை கூட்டுவதற்கு தாம் முயற்சி செய்த போது அவர்கள்அனை (12 ஆம் பக்கம் பார்க்க)



# யுத்த நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக மாற்ற வேண்டும்!

## என்கிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

யுத்தநிறுத்த உடன்படிக்கை முழுமையாக மாற்றப்பட வேண்டும் என்றும் அது குறித்தே அடுத்த கட்டப் பேச்சில் விவாதிக்கப்பட வேண்டும் எனவும் அவ்வாறில்லையெனில் அரசுக்கான தமது ஆதரவை விலக்கப் போவதாகவும் ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஜாதிக ஹெல உறுமய தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் மேற்குறிப்பிட்ட கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படாவிடில் அரசாங்கத்திற்கு நாம் வழங்கி வரும் ஆதரவை விலக்கிக்கொள்ள நேரிடும்.

போர் நிறுத்த உடன்படிக்கை முழுமையாக மாற்றப்பட வேண்டும். அது குறித்தே தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஜெனீவாவில் இரண்டாம் கட்டமாக நடைபெறும் பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்பட வேண்டும். அரசாங்க தரப்பினரை முட்டாளாக்கியே புலிகள் அமைப்பினர் பேச்சு மேசைக்கு செல்கின்றனர். இந் நிலையிலிருந்து விடுபட்டு பேச்சு மேசையில் அரசதரப்பு முழு ஆதிக்கம் செலுத்த வேண்டும்.

துணைப்படைகளின் ஆயுதங்களை களைவதற்கு இடமளிக்க முடியாது. அரசாங்கம் அம்முயற்சியில் ஈடுபடவும் கூடாது. அவ்வாறு ஆயுதக் களைவு மேற்கொள்ளப்பட வேண்டுமெனில் முதலில் தமிழீழ விடுதலைப்புலிகளே ஆயுதங்களைக் களைய வேண்டும். ஏனெனில் துணைப்படைகள் ஆயுதம் ஏந்துவதற்கு புலிகளே காரணமானவர்கள்.

இதேவேளை, பலர் எம்மை இனவாதிகள் என்றும் முட்டாள்கள் என்றும் யதார்த்தத்தை புரியாதவர்கள் என்றும் கூறுகின்றனர். முட்டாள்களின் பார்வைக்கே முட்டாள்கள் தென்படுவார்கள் எனும் பதிலை அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

போர்நிறுத்த உடன்படிக்கையை நாம் ஏற்றுக்கொண்டுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க கூறி வருகிறார். ஆனால் அந்த உடன்படிக்கையை நாம் அன்றும் நிராகரித்தோம் இன்றும் நிராகரிக்கிறோம். நாளையும் நிராகரிப்போம். இதனை உறுதியாக அவருக்கும் நாட்டுக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மஹிந்த சிந்தனைக்கு மாறான வழியில் அரசாங்கம் பயணிக்கின்றது. எம்முடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கைச்சாத்திட்ட உடன்படிக்கையும் இன்று மீறப்படுகிறது. இவை பாரிய மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இலங்கையிலேயே நடத்தப்படவேண்டும். இந்த நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம். அதனாலேயே ஜெனீவா பேச்சுக்களுக்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்தோம்.

சமாதானப் பேச்சுவார்த்தை எனும் பெயரில் புலிகள் வெளிநாடு செல்வது தமது இராணுவ பலத்தை வலுவடையச் செய்யும் நோக்குடனேயே இதனைத் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காகவே பேச்சுக்கள் இலங்கையில் நடத்தப்பட வேண்டும் என்று நீம் வலியுறுத்தி வருகிறோம்.

சமஷ்டி தீர்வுக்கோ அல்லது வேறெந்த தீர்வுகளுக்கோ புலிகள் அமைப்பினர் எப்போதும் விருப்பம் தெரிவிக்க மாட்டார்கள் என்பதே உண்மை. தனிநாட்டுக் கோரிக்கையை அவர்கள் எப்போதும் கைவிடப் போவதில்லை. இதனையே சு.ப. தமிழ்ச்செல்வன், அன்ரன் பாலசிங்கம் ஆகியோரின் கருத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றது என்றார். (க-4,5)

# அறிமுக உரையும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினர் நடாத்தும் யோகாசன தியான வகுப்புக்களில் இலவச அறிமுக உரையும் கருத்தரங்கும் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு கோண்டாவில் கிழக்கு இருபாலை வீதியிலுள்ள அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தில் சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தின் பொருளாளர் சி.சசீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யோகா ஆச்சாரியார் யோகிராஜன் 'யோகா சனமும் மனித வாழ்வும்' எனும் விடயம் குறித்தும் நவராஜ் 'உள நெருக்கீட்டிற்கான சுய முகாமைத்துவம்' எனும் விடயம் குறித் தும் கருத்துக்களை வழங்கவுள்ளனர். (க-9)

# பணியாளர்கள் கடத்தப்பட்டமை குறித்து எந்தத் தகவலும் இல்லை

## த.பு.கழக அமைப்பின் ஆலோசகர் கவலை

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணியாளர்கள் கடத்தப்பட்டது தொடர்பாக இதுவரை எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லையென அந்த அமைப்பின் ஆலோசகர் கவலை தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி கடத்தப்பட்ட இவர்கள் பற்றிய விரிவான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டபொழுதிலும் அது பற்றிய ஏதுவித ஆக்கபூர்வமான பெறுபேறுகளும் இதுவரை கிடைக்கவில்லையென்றும் அமைப்பின் ஆலோசகர் அர்ஜீன எதிர் வீரசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

பணியாளர்களை கடத்திச் சென்றவர்கள் எமது அமைப்புடன் இதுவரை எந்தவிதமான தொடர்புகளையும் மேற்கொள்ள வில்லை.

மனித உரிமைகள் அமைப்புக்களும் இவ் விடயம் தொடர்பாக உன்னிப்பாக அவதானித்து வருகின்றது அத்துடன் உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் அந்த அமைப்புக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றன.

இதேவேளை, பொலிஸாரும் இச்சம்பவம் தொடர்பாக எந்தத் தகவலையும் எமக்கு வழங்கவில்லை, எனினும் இக் கடத்தலுடன் தொடர்புடைய அனைத்து சாட்சியங்களையும் விசாரணை செய்துள்ளனர்.

இதுதவிர கடத்தல் சம்பவம் இடம்பெற்ற வெலிகந்த பிர தேசத்திலும் பொலிஸார் விசாரணைகளை நடாத்தியுள்ளனர். எது எவ்வாறாயினும் எமது ஊழியர்கள் பாதுகாப்பாக இருக்கின்றனரா? அல்லது கடத்திச் சென்று எங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பது பற்றிய எவ்வித தகவலும் இதுவரை கிடைக்கவில்லை என்று அர்ஜீன எதிர் வீரசிங்க கவலையுடன் தெரிவித்துள்ளார். (க-5)

# 25 ஆவது ஆண்டு நிறைவு விழா

(கொழும்பு)

ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 25வருடங்கள் பூர்த்தியடைந்ததை யொட்டி சமய நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை மேற்படி சபை ஒழுங்கு செய்துள்ளது.

இதன் பிரதான நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இம்மாதம் 14ஆம் திகதி கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-7)

# இராசி பலன்

**02.03.2006**
**(மாசி 18, வியாழக்கிழமை)**
**திருதியை பின்னிரவு 12.34 மணிவரை**
**உத்தரட்டாதி பிற்பகல் 11.52 மணிவரை**
**இராகுகாலம் 01.57-3.27 மணிவரை**
**சுபநேரம் 7.57-9.27 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | பிதாசிந்தை; எடுத்தகாரியம் தாமதமாகும், எதிர்பாராத நன்மை, இடமாற்றம். |
| இடபம் | தொழில்சிந்தை, மனமகிழ்ச்சி, உறவினர் வருகை, நல்ல வருமானம். |
| மிதுனம் | சுபநிகழ்வு, உற்சாகம், பிறர் உதவி, செய்தொழில் விருத்தி. |
| கடகம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, புதிய திட்டமிடல், வீண்பயம். |
| சிங்கம் | மரியாதைக் குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், உடல்நலக்குறைவு, போசன சுகம். |
| கன்னி | அபூர்வ சந்திப்பு, வாகனவசதி, பெரியோர் உதவி, போசனசுகம். |
| துலாம் | பணவருவாய், பகைவர் நேசம், சுக வாழ்வு, காரிய அனுகூலம். |
| விருச்சிகம் | வியாபார விருத்தி, காரிய இடையூறு, போசன சுகம், தாழ்ந்த சுபாவம். |
| தனுசு | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, வாக்கு மேன்மை, பயந்த சுபாவம். |
| மகரம் | இனிய சம்பவம், வாக்குமேன்மை, கூட்டு முயற்சி, போசன சுகம். |
| கும்பம் | மதிப்புக்குறைவு, பொருள் விரயம், சிந்தனை மிகுதி, பிரயாணம். |
| மீனம் | நல்ல முயற்சி, சகோதரர் உதவி, ஜன வசியம், சயனசுகம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

# வீதி ஓரங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் பாதசாரிகள் சிரமம்

(நல்லூர்)

திருநெல்வேலி பொதுச்சந்தைக்கு பொருட்கள் கொள்வனவுசெய்ய வருபவர்களில் அதிகமானவர்கள், சந்தைக்கு முன்னால் உள்ள வீதிகளின் ஓரங்களில் துவிச்சக்கரவண்டிகளை நிறுத்தவிட்டுச் செல்வதால் தினமும் காலை 6 மணி தொடக்கம் 11மணி வரை இவ் வீதியால் செல்லும் பொதுமக்கள், வாகனங்கள் செலுத்துவோர் பெருங் கஸ்டங்களை எதிர்கொள்வதைக் காணமுடிகிறது.

குறிப்பாக திருநெல்வேலி சந்தியிலிருந்து கல்வியங்காடு செல்லும் ஆடியபாதம் வீதியில் திருநெல்வேலிச் சந்தைப் பகுதியை அண்டிய பகுதியில் வீதியின் கரையோரங்களில் துவிச்சக்கரவண்டிகள் மோட்டார் சைக்கிள் போன்றவை நிறுத்தப்படுவதால் சந்தைப்பகுதியை அண்டிய கடைகளில் பொருட்கள் கொள்வனவு செய்வோரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். (கு-134)

# சிவராம் கொலைச் சந்தேக நபரின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராம் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவரை இம் மாதம் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அவிசாவளை மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிவராம் படுகொலை சம்பந்தமான முறைப்பாட்டினை ஆய்விற்கெடுத்த வேளை, சட்டமா அதிபரின் எதிர்ப்பினை கவனத்தில் எடுத்த நீதிபதி நிஹால் சில்வா சந்தேக நபருக்கு பிணை வழங்க மறுப்புத் தெரிவித்து விளக்கமறியலை நீடித்தார். (ந-4)

# விசாரணை ஒத்திவைப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் 5 மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சிறப்பு அதிரடிப்படையினரின் வழங்கு விசாரணைகள் ஏப்ரல் மாதம்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து திரு மலையில் நடைபெறவிருந்த வழக்கு விசாரணைகளுக்கு 16 சிறப்பு அதிரடிப்படையினரும் அழைத்துச் செல்லப்படவில்லை. இதன் காரணமாக விசாரணை ஏப்ரல் மாதம் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ந)

# மின்விநியோகம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சாரசபை யாழ். பிரதேச செயலகம், மின்பராமரிப்பு வேலைகளைச்சீர்செய்யும்பொருட்டு, நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை பின்வரும் இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத் தந்துள்ளது.

இதற்கமைவாக குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மின் தடைப்படும். இப் பிரதேசங்களில் மின் பராமரிப்பு வேலைகள் விரைவாக முடிவுற்றால் மேற்குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பு மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சாரசபை அறிவித்துள்ளது. (க-7)

# ஈழத்தமிழர் பிரச்சினையில் அ.தி.மு.கவுக்கும் விடுதலைச் சிறுத்தைகளுக்கும் ஒரே நிலைப்பாடு

## தொல்.திருமாவளவன்

(கொழும்பு)

ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.வுக்கும் எங்களுக்கும் ஒரே நிலைப்பாடுதான் என்று விடுதலைச் சிறுத்தைகளின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தொல்.திருமாவளவன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஈழத் தமிழர் பிரச்சினையில் எங்களுக்கு என்ன நிலைப்பாடு இருக்கிறதோ அதே நிலைப் பாடு அ.தி.மு.க.வுக்கும் இருக்கிறது. சமீபத்தில் இலங்கை அகதிகள் வந்தபோது 1983ஆம் ஆண்டில் நடந்த இனக்கலவரத்தை நினைவுப்படுத்தியது என்று ஜெயலலிதா குறிப்பிட்டிருந்தார்.

ஈழக் தமிழர்களுக்கு எதிராக செயற்படும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தமிழகத்தில் வரவேற்க தயாராக இல்லை என்று ஜெயலலிதா மறுத்திருந் தார். எனவே, இப்பிரச்சினையில் அ.தி.மு.க. மற்றும் விடுதலைச் சிறுத்தை இயக்க நிலைப்பாட்டில் முரண்பாடு இல்லை.

நாங்கள் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளத்தான் கூட்டணி வைத்துள்ளோம். கொள்கை வெவ்வேறாக இருக்கலாம். இடதுசாரிக் கொள்கைகளை தி.மு.க. நிறைவேற்றும் என்றோ அல்லது தி.மு.க. கொள்கைகளை இடசாரிகள் நிறைவேற்றும் என்றோ அறிவிப்பு செய்து கூட்டணி வைப்பது இல்லை.

எனவே கொள்கையில் சமரசத்திற்கு இடமில்லை என்றார். (க)

# பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தரமுடியாத தெளிவற்ற நிலையில் சிங்கள அரசாங்கம்

## -கா.வே.பாலகுமாரன்-

(கிளிநொச்சி)

ஜெனீவா பேச்சுவார்த்தையில் சிங்களத்தின் ஒருமுகம் கிழிக்கப்



பட்டு அம்பலப்படுத்தப்பட்டு இருக்கிறது. என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா. வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

புலிகளின் குரல் வானொலியில் கடந்த சனிக்கிழமை அரசியல் அரங்கம் பகுதியில் உரையாற்றியகா.வே.பாலகுமாரன்மேலும் தெரிவிக்கையில்,

ஜெனீவா பேச்சுக்கள் தொடர்பான செய்திகள் உங்களுக்கு வந்தடைந்து கொண்டிருக்கின்றன. 1920ஆம் ஆண்டு தொடக்கம் சிங்களத் தலைவர்கள் எங்களுக்கு தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இருப்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். அன்று அவர்களுக்கு நாங்கள் கொடுத்த வாய்ப்பை இப்போதும் கொடுத்திருக்கிறோம்.

ஜெனீவா பேச்சுக்களின் முடிவுகளை எங்கள் மக்கள் மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். இருப்பினும் அவர்கள் மத்தியில் சில சந்தேகங்கள் உள்ளன. அவற்றை அவநம்பிக்கை என்று பார்க்காது விழிப்புணர்ச்சி என்ற அடிப்படையில் பார்க்க வேண்டும்.

*சிங்கள ஒடுக்குமுறை இயந்திரங்கள்*

இன்று சிங்களத்தின் ஒடுக்குமுறை இயந்திரங்களாக இராணுவம் யாப்பு, ஊடகங்கள் ஆகியவை இருக்கின்றன.

இந்த மூன்றும் மோசமான ஒடுக்கு முறைக் கருவிகளாக தமிழ் மக்கள் மீது பாய்ந்து தமிழர்களைக் கொன்று குவித்த வரலாறும் நீங்கள் அறிந்ததே. இராணுவ ரீதியான ஒடுக்குமுறையை நாம் போரின் மூலம் வென்றதன் பின்னரும் இராணுவம் செயற்படுவதற்கான துணைக்காரணிகளைதன்னகத்தே வைத்திருக்கின்றது.

இராணுவத்துக்கு தமிழ் மக்களுடன் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. தமிழ் மக்களைப் பயன்படுத்தி அவர்களால் புலனாய்வுத் தகவல்களைச் சேகரிக்கமுடியாது. ஆகையால் துணை குழுக்கள் எனப்படும் ஊன்றுகோல் இல்லாமல், துணை இராணுவக் குழுக்களின் ஆதரவில்லாமல் இராணுவம் தமிழீழப் பகுதிகளில் இயங்க முடியாது. இன்று நாங்கள் கொடுத்திருக்கும் நெற்றியடியால் இந்தத் துணை இராணுவக்குழுக்களை இல்லாது செய்ய அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. ஒரு கூட்டறிக்கை விடுவதற்குக் கூட சிங்களத்தரப்பால் முடியவில்லை. அவர்களின் இந்த அச்சத்துக்குக் காரணம் இராணுவம் தான்.

இதனால் தான் இராணுவ உடுப்புக்களை மாற்றிப் போடுவதனூடாக இந்தச் சரத்தை இவர் கள் நீர்த்துப் போகச் செய்வார்களா? அல்லது படுகொலைகளை நிகழ்த்திவிட்டு சாட்சியம் இருக்கிறதா என்று கேட்பார்களா? அல்லது இராணுவம் மஹிந்தவின் சொல்லைக் கேட்குமா? என்ற 3 முக்கியமான சந்தேகக் கண் கொண்டு நாங்கள் பார்க்க வேண்டியுள்ளது.

இந்த முறை இவை எல்லாம் உலகத்தின் கண்ணுக்கு முன்னால் நடைபெறுவ தால் நாங்கள் சற்று மனத்திருப்தியடைகிறோம். மஹிந்தவுக்கு மீண்டும் இருமாத வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த பேச்சுவார்த்தை தொடங்கு வதற்கு முன்னால் என்ன செய்யப் போகிறார் எனப் பார்ப்போம். இங்கே இன்னொரு செய்தியை நாங்கள் கூற விரும்புகிறோம். அது எங்கள் மத்தியில் எழக்கூடிய இயல்பான சந்தேகம் தான்.

*தொடரும் ஏமாற்று வேலை*

1920ஆம் ஆண்டு தொடக்கம் எழுத்து ரீதியாக சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றிய வரலாறு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. 1920ஆம் ஆண்டு அப்போதிருந்த பொன்னம்பலம் அருணாச் சலத்துடன் மேல்மாகாணத்தில் தொகுதியை ஒதுக்கித் தருவதாகக் கூறி செய்து கொண்ட ஒப்பந்தத்தை எவ்வாறு தூக்கி எறிந்தார்கள் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அன்று தொடங்கிய இந்த ஏமாற்றச் செயலை இன்றைக்கு சிங்களம் செய்ய முடியுமா? முடியாதா? என்ற வினாவை உலகத்துக்கு முன்னால் நாங்கள் எழுப்பியிருக்கின்றோம்.

நீதியான, கௌரவமான வெற்றி ஏற்படக்கூடிய அமைதியையே நாங்கள் கோருகிறோம். அதைத்தான் இந்தப் பேச்சு வார்த்தைக்கூடாக உலகத்துக்குச் சொல்லியிருக்கிறோம்.

எங்களைப் பொறுத்தவரை இந்தப் பேச்சுக்கள் எல்லாம் தமிழ் மக்களின் நீதி நியாயங்களை உலகத்துக்கு முன்வைக்கிற ஒரு வாய்ப்பாக அமைகின்றது. இழப்பில்லாமல் ஒரு தீர்வைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை நாம் ஆயிரம் முறை அளிக்கத் தயாராக இருக்கிறோம் என்று பாதிக்கப்பட்ட தமிழ் மக்களாகிய நாங்கள் கூறுவதற்கு உரிமை இருக்கிறது. இதனூடாக எங்களது அங் கீகாரத்தையும், நீதியின் அவசியத்தையும் உலகத்தின் முன்னால் நிரூபித்துக்கொண்டு வருகிறோம்.

சிங்கள ஒடுக்குமுறை என்பது பிரதானமாக சில பொறிமுறைக் கூடாக தொடர்ந்து நிகழ்த்தப்பட்டுக்கொண்டு வருகிறது. இவற்றை மிக இலாவகமாக, நுணுக்கமாக செய்கிறார்கள். சிங்களத்தின் இனவாதக் கட்டமைப்புகளான இராணுவம், யாப்பு சட்டங்கள் கட்சிகள் பிக்குகளை உள்ளடக்கிய பெரும்பான்மை சிங்களத் தொடர் பாடல் ஊடகங்கள் அனைத்துமே தமிழ் மக்கள் மீது நிகழ்த் தப்படுகின்ற ஒடுக்கு முறைக்கு மிகப் பெரிய சான்றாக இருக்கின்றன.

சிங்கள இராணுவம் தமிழ் மக்கள் மீது நிகழ்த்திய படுகொலைகளுக்கு எதிராக புலிகள் போராடி, சிங்கள இராணுவத்தைச் செயலற்றதாக ஆக்கியதற்குப்பின்னால் சிங்கள இராணுவத்தின் செயற்பாடு எவ்வாறு இருக்கிறது? துணைப் படை அமைப்பு எனப்படும் ஒட்டு துரோகக் குழுக்களை உருவாக்கி அவற்றின் வழி புலனாய்வுத் தகவல்களைச் சேகரித்து தமிழ் மக்களை அழித்துக் கொலை செய்து பழி வாங்குவதற்கான ஒரு திட்டத்தை உருவாக்கி மிக மோசமாகச் செயற்படுகிறது. இதனை அம்பலப்படுத்தி அநீதியை இந்த உலகத்துக்குச் சொல்வதற்கான ஒரு தளமாக இந்தப் பேச்சுவார்த் தையை நாம் பயன்படுத்தி இருக்கிறோம்.

*உலகின் முன் வைக்கப்பட்ட உண்மை*

அமைதிக்குத் தடையாக யார் இருக்கிறார்கள்? சிங்கள இராணுவத்தின் செயற்பாடுகளுக்கு யார் துணை போகிறார்கள்? என்பது ஒரு மையப் பொருளாக நெத்தியடியாக உலகத்தின் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இதனால் சிங்களத்தின் ஒரு முகம் கிழிக்கப்பட்டு அம்பலப்படுத்தப்பட்டு இருப்பதாக நாம் எண்ணுகிறோம்.

*அறிக்கை அரசியலில் அரசகுழுவினர்*

பேச்சுவார்த்தைக்குப் போன அரசாங்கக் குழுவாக இருந்தாலும் சரி– ஜே.வி.பி.யாக இருந்தாலும் வெறுமனே அறிக்கை அரசியலில் ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்கள். தங்களுடைய நிலைப்பாட்டை அறிக்கை யூடாக வெளியிட்டதற்குப்பின்னால்எதுவும்செய்ய முடியாதவர்களாக உள்ளனர். சிங்களத்தின் நிலையானது ஒரு தற்காப்பு நிலையைத் தாண்டி மிகப் பலவீனமான அரசியல் நிலைக்குச் சென்றுவிட்டது. இது நாங்கள் எதிர்பார்த்த நிலை. இதை அடைவதற்காகவே நாங்கள் பாடுபட்டோம். இன்று சிங்களத் தரப்பின் குரல் பலவீனமாக ஒலிக்கிறது. அறிக்கை அரசியலில் ஈடுபட்டு அறிக்கைக் கூடாக எங்கள் குறைகளைச் சொல்லி விட்டோம்– இனி புலிகள் நீதி வழங்க வேண்டும் என்று தமிழ் மக்களிடம் நீதிகேட்க வேண்டிய நிலைக்கு சிங்களத் தரப்பு தள்ளப்பட்டிருக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது.

தமிழ் மக்களின் குரலை தொடர்ந்து ஒலிப்பதற்கு, எந்தவிதமான முறிவும் இல்லாமல் தமிழ் தலைமையாக தமிழீழ விடு தலைப் புலிகள் தங்கள் தரப்பை மிக நியாய பூர்வமாக முன்வைத்துக் கொண்டு வருகிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பாக கனேடிய பல்கலைக் கழகப் பேராசிரியர் டேவிட் கமூர் என்பவர் சிங்களத் தரப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் பங்கேற்று சில அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டதாக அறிந்தோம்.

தமிழ்த் தரப்பிலே இருப்பது போன்ற தொடர்ச்சியான ஒரு தலைமையானது சிங்களத் தரப்பில் இருக்கிறதா? அது உருவாகுமா? அப்படி உருவாகாவிட்டால் எவ்வாறு பிரச்சினையைத் தீர்ப்பது? என்ற கேள்வியை அவர் எழுப்புகின்றார். நோர்வேத் தரப்பில் கூட அரசாங்கத்தை ஆளும் கட்சியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களை அரவணைத்து எந்தக் கட்சி சாயமும் பூசாமல் தொடர்ந்து பயன்படுத்துகிறார்கள்.

உதாரணமாக விதார் ஹெலகீசன் இப்போது பதவியில் இல்லை. ஆனால் அவரும் ஜெனீவா பேச்சுக்கு வருகை தந்திருந்தார். ஜெனீவா பேச்சுவார்த்தை முடிந்த மறுகணமே சிங்களத்தில் அறிக்கைகள் குவியத் தொடங்கிவிட்டன. மிக மோசமான அறிக்கைகள் வரத் தொடங்கிவிட்டன.

இந்நிலையில் எங்களுடைய கருத்தைக் கேளாமல் சிறிபால டி சில்வாவும், ஜெயராஜ்பெர்ணாண்டோ புள்ளேயும் மாறிச் சொல்லிவிட்டார்கள்என்று அவர்கள்மீது மஹிந்த பழிபோடக் கூடும். இல்லாவிட்டால் தனது அரசியலைக் காப்பாற்றுவதற்காக பொறுப்பை அவர்கள் மீது சுமத்தி தீர்வை அவர்கள் காண்பதற்கான வழியை உருவாக்கி தன்னுடைய ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள முயலலாம்.

இப்போது சிங்கள அரசியலில் தீர்வை வைக்க முடியாத தெளிவற்ற நிலையைப் பார்க்கும் போது இந்த உலகம் எவ்வளவு காலத்துக்கு எங்கள் மீது அழுத்தத்தைப் போட முடியும்? என்றகேள்வி திரும்பத் திரும்ப வருகிறது. இதனை உலகிற்கு வெளிக்காட்ட நாங்கள் மனதை உறுதிப்படுத்திக் கொண்டு செல்ல வேண்டியதாக இருக்கிறது.

ஒடுக்கப்படுகின்ற மக்கள் தங்களது நீதியைச் சொல்வதற்கு எத்தனையோ முறை முயலவேண்டும் என்ற வரலாற்று நியதியை நாங்கள் பார்க்கிறோம். இன்று நாங்கள் ஜெனீவாவில் முதலிலிருந்து எல்லாவற்றையும்கூறி அமைதிக்கு எவ்வாறு பங்கம் ஏற்படுகின்றது என்பதை விளக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.

மனிதன் குற்றமிழைக்கிற போது மிருகமாகின்றான். குற்றத்தை உணரும்போது திரும்பவும் மனிதனாகின்றான். குற்றத்தைத் திருத்தும்போது மாபெரும் புனிதனாகின்றான். குற்றத்தை மன்னிக்கும் போது தெய்வமாகின்றான். இந்த சொற்களுக்கான பொருளை அரசாங்கம் உணர்ந்து செயற்பட வேண்டும் என்றார். (கு)

# சர்ச்சைக்குள்ளாகிய நிலையில் பாதுகாப்பு ஆலோசகர் நியமனம்

(கொழும்பு)

நாடாளுமன்ற பாதுகாப்பு ஆலோசகர் நியமனமானது சர்ச்சைக்குள்ளாகி வருகிறது. அடுத்த மாத நடுப்பகுதியில் ஓய்வு பெற்றுச்செல்லவுள்ள நாடாளுமன்றத்தில் உயர் பதவி விகிக்கும் அதிகாரி ஒருவரை நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு ஆலோசகராக ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அதிகார வட்டாரத்தில் சிலர் முயற்சிப்பதாக கூறப்படுகின்றது.

பாதுகாப்பு ஆலோசகர் பதவியை வகிப்பதற்கு அவருக்கு எவ்வித தகுதியும் இல்லை என்றும் நாடாளுமன்ற பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

12 வருடங்களுக்கும் மேலாக நாடாளுமன்ற பாதுகாப்பு ஆலோசகர் பதவி வெற்றிடமாக இருப்பதாகவும் திடீரென அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு அதிகாரிகள் முயல்வது எதற்கென்று கேள்வி எழுவதாகவும் தெரிவிக்கும் பணியாளர்கள் இந்த பாதுகாப்பு ஆலோசகர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு எந்தவொரு அவசரத் தேவையும் தற்போது இல்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

அதிக ஊதியத்துடன் நாடாளுமன்ற பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்கு அந்த நபரை நியமிக்க தனிப்பட்ட உறவுகளே காரணம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

நாடாளுமன்றத்தின் பாதுகாப்பிற்காக தனியான பொலிஸ் பிரிவு இருக்கையில் பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்காக ஒருவரை நியமிப்பதற்கான தேவை என்ன என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (து)

# நவீன தொழில் நுட்பத்துடன் கூடியதேசிய வேலைத்திட்டம்

(கொழும்பு)

மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நவீன தொழில் நுட்பத்தின் உத்திகளோடு கூடிய தேசிய வேலைத் திட்டம் ஒன்று வகுக்கப்படவுள்ளதாக அமைச்சர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 1392 இலட்சம் ரூபா செலவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள இந்த வேலைத் திட்டத்துக்கு முன்னோடியாக 'செங்கடகல, தவோதய' என்னும் பெயரில் மூன்று மாத கால துரித வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இத்திட்டத்தின் மூலம் காணி வசதியற்ற வறிய மக்களுக்கு காணிகளைப் பெற்றுக்கொடுத்தல், பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்தல், கிராமிய வளங்களைப் பிரயோகித்து மேற்கொள்ளப்படும் கைத்தொழில் துறைகளை ஊக்குவித்தல் உட்பட 17 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (து-7)

# பட்டமளிப்பு விழா

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் 2005ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இம்மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்துக்குரிய அழைப்பிதழ் இன்னமும் கிடைக்காத மாணவர்கள் பல்கலைக்கழக பரீட்சைத் திணைக்கள சிரேஷ்ட உதவிச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். (து-7)

# இன்று ஒரு தகவல்

## கர்ணங்கள்

"நேற்று வரை அந்த ஆள் உறுதியாகத்தான் சார் இருந்தான்.இன்று திடீரென்று கர்ணம் பாய்ந்துவிட்டான்" என்று கூறுவது உண்டு. இதற்கு என்ன அர்த்தம் என்றால் சொன்ன வார்த்தையிலிருந்து திடீரென்று பல்டி அடித்துவிட்டான் என்று அர்த்தம். இப்படிப்பட்ட மனிதர்கள் இன்று மிக அதிகம்.

மனிதர்களுடைய சுபாவத்தை வைத்து ஆன்மீகவாதிகள் இவர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள். கஜகர்ணம் போடுபவர்கள் சில பேர். அஜகர்ணம் போடுபவர்கள் சிலபேர். கோகர்ணம் போடுபவர்கள் சில பேர். இது தான் அவர்கள் பிரித்திருக்கும் மூன்று பிரிவு. கஜம் என்றால் யானை. அஜம் என்றால் ஆடு. கோ என்றால் பசு. யானையின் சுபாவம் என்ன தெரியுமா? அது எப்போதும் தன்னுடைய நான்கு கால்களையும் சரியாக ஊன்றி நிற்காது. ஒன்று மாற்றி ஒன்றைத்தூக்கி வைத்துக்கொண்டு அப்படியும் இப்படியுமாக அசைந்து ஆடிக்கொண்டுதான் இருக்கும். இதுபோல் சில மனிதர்கள் உண்டு. இவர்கள் எப்படியென்றால் ஒரே விடயத்தில் தங்களுடைய கருத்தைச் செலுத்தாமல் பல விஷயங்களில் ஈடுபட்டுக் குழப்புவார்கள்.

யானை ஒரு காலையும் உறுதியாக ஊன்றாதது போல இவர்கள் ஒரு விஷயத்திலும் உறுதியாக இருக்கமாட்டார்கள். இதுவா... அதுவா என்று குழம்பிக் கொண்டே இருப்பார்கள். இவர்கள் எல்லோரும் கஜகர்ணம் போடுபவர்கள்.

அஜகர்ணம் போடுபவர்கள் எப்படி தெரியுமா? ஆட்டு வாலைப் பிடித்து யாராவது இழுத்தால் உடனே அது தன் தலையைத் தொங்கப் போட்டுக்கொள்ளும். அதுபோல் சில மனிதர்கள் உண்டு. அவர்களின் குறைகளை யாராவது சுட்டிக்காட்டினால் போதும்... உடனே அவர்களை வெறுக்க ஆரம்பித்து விடுவார்கள். அவர்களைத் திரும்பிக்கூட பார்க்கமாட்டார்கள். ஆடுபோல தலையைக் குனிந்துகொண்டே போய்விடுவார்கள் . இந்த மாதிரி ஆசாமிகள் எல்லாம் அஜகர்ணம் போடுபவர்கள்.

மூன்றாவது வகை ஆசாமிகள் கோகர்ணம் போடுபவர்கள். கோ என்றால் பசு. பசுமாட்டின் உடலில் எந்த இடத்தில் விரலால் தொட்டாலும் அந்த இடம் உணர்ச்சிவசப்பட்டு உடம்பு சிலிர்க்கும். அதுபோல் அறிவாளிகள் நடந்துகொள்வார்கள். எந்தச் சிறு குறையைச் சுட்டிக் காட்டினாலும் அதைப் புரிந்துகொண்டு மன்னிப்புக் கேட்டுத் திருந்துவார்கள்.இவர்களைத்தான் கோகர்ணம் போடுபவர்கள் என்று செல்வது உண்டு . இந்தக் காலத்திலெல்லாம் காரிய கர்ணம் போடுபவர்கள் தான் அதிகம். ஏதாவது காரியம் சாதிப்பதற்காக கர்ணம் போடுவது, காலில் விழுவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் ஆசாமிகள் எந்தக் காலத்திலும் உண்டு. புத்தரிடமே போட்டுக் காட்டியிருக்கிறான் ஒருவன். அது என்ன கதை தெரியுமா?

ஒரு நாள் புத்தர்... லேசாகக் கண்ணைத் திறந்து பார்த்தார். இவன் உடனே ஆரம்பித்தான். "எங்கள் வழிகாட்டியே! உங்களை மாதிரி ஒரு சிறந்த ஞானி இந்த உலகில் வேறு யாரும் இல்லை.உங்களை மாதிரி அன்பும் அருளும் ஒருங்கே கொண்டவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்... உங்களை மாதிரி பெருமைக்குரியவர்கள யார் இருக்கிறார்கள்?" என்று புகழ ஆரம்பித்தான்.

இதைக் கேட்டதும் புத்தர் அவனைப் பார்த்து "சீடனே! எனக்கு முன்னால் தோன்றிய ஞானிகளை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார். 'தெரியாது ஐயா' என்றான் அவன். "சரி.. இனி எனக்கு அடுத்து தோன்றப் போகும் ஞானிகளையாவது உனக்குத் தெரியுமா?" என்றார். 'தெரியாது ஐயா' என்றான் அவன்."சரி... என்னையாவது நீ முழுமையாகப் புரிந்துகொண்டிருக்கிறாயா?" என்று கேட்டார். தலையை ஆடுமாதிரி தொங்கப் போட்டுக்கொண்டு 'இல்லை ஐயா' என்றான். "பிறகு ஏன் அலங்காரமான வார்த்தைகளால் என்னைக் குறிப்பிட்டாய்? அதனால் எந்தப்பயனும் இல்லையே" என்றார் புத்தர். இவன் பேசாமல் தலைய்யைக் குனிந்துகொண்டே போய்விட்டானாம்.

கர்ணத்தில் தோப்புக்கர்ணம் என்று ஒன்று உண்டு... தப்பு செய்த மாணவன் வாத்தியார் முன் போடுவது... பாவம் செய்த மனிதன் ஆண்டவன் முன்னால் போடுவது. எனக்குத் தெரிந்த ஒருவர் மிகவும் அசந்து போய் மெதுவாக நடந்து வந்தார். "என்ன விஷயம்?" என்று கேட்டேன். "இப்போது தான் 108 தோப்புக்கர்ணம் போட்டுவிட்டு நேராக நடந்துவந்து கொண்டிருக்கிறேன்" என்றார்.

"கோயிலிலிருந்து வந்துகொண்டிருக்கிறீகளா?" என்றேன்."இல்லை... வீட்டில் இருந்து வருகிறேன்" என்றார் அசட்டுத்தனமாக.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# போர் நிறுத்தத்தில் திருத்தம் கொண்டுவர முயன்றால் எமது குழு பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளாது

## தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இணையத்தளம் ஒன்றுக்கு பேட்டி



(கொழும்பு)

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை திருத்துவதையோ மீள்பரிசீலனை செய்வதையோ தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாக எதிர்ப்பார்கள் என்று அரசியல் ஆலோசகர் அன்ரன் பால சிங்கம் மீண்டும் தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஜெனீவாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை திருத்துவதற்கு தாம் இணங்கவில்லை என்று அவர் உறுதிப்பட கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கை அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்கள் கொண்டுவர முயன்றால் தமது குழு பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் போது யுத்த நிறுத்த ஆவணங்கள் சட்டபூர்வமானதல்ல என்றும் அரசியல்அமைப்பின்படி பெறுமதியற்றதெனவும் ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல். டி சில்வா முன் வைத்த வாதத்தைதாம் நிராகரித்ததாகவும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்துள்ளார். (கு-9)

# மின்சாரசபை ஊழியர்களுக்கு— விரைவில் சம்பள அதிகரிப்பு நிலுவை

(கொழும்பு)

மின்சாரசபை ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு நிலுவைப் பணத்தை எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் மின்சாரசபை ஊழியர்கள் மீண்டும் ஒரு முறை வேலை நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றீ மின்சக்தி அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

அரச ஊழியர்களுக்கு 2003ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பு மின்சாரசபை ஊழியர்களுக்கு ஒழுங்கு முறையாக வழங்கப்படவில்லை. எனவே அவர்களுக்கான நிலுவைப் பணத்தை எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் வழங்குவதற்கு உறுதிய ளித்துள்ளேன்.

ஆனால் அரசியல் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு ஜே.வி.பி மற்றும் ஐ.தே.க. ஆகிய கட்சிகளைச் சார்ந்த தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

மின்சாரசபையில் 59 தொழிற்சங்கங்கள் இயங்குகின்றன. அவற்றில் இரண்டு தொழிற்சங்கங்களே வேலை நிறுத்தத்தை மேற்கொள்ள முயற்சிக்கின்றன. அமைச்சர்என்றவகையில் என்னில்நம்பிக்கைவைக்க வேண்டியது ஊழியர்களின் தார்மீகக் கடமை யாகும்.

ஜே.வி.பி. சார்பான தொழிற்சங்கங்கள் பொறுப்புடன் நடந்துகொள்ளும் என்று கருதினேன் . ஆனால் அந்தத் தொழிற்சங்கங்கள் முழுமையாக அரசியல் இலாபம் கருதி செயற்படுகின்றன என்று தெரிவித்தார். (க-9)

# பணயக் கைதிகளாகப் பிடிபட்டவர்களை விடுவிக்க அரசாங்கம் முயற்சி

(கொழும்பு)

சோமாலிய கடற்பரப்பில் கொள்ளையர்களி னால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த கப்பல்பொறியியலாளரை விடுவிப்பதற்கு கென்யா மற்றும் ஓமானிய தூதரகங்களுடன் இணைந்து செயற்படுவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

யூலியா என்ற வர்த்தகக் கப்பலின் பொறியியலாளரான சின்னி றொட்டிக்கோ உள்ளிட்ட கப்பல் பணியாளர்கள் நலமாக இருப்பது குறித்துதகவல்கள் கிடைத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோமாலியாவில் இலங்கை தூதரகம் ஒன்று இல்லாத நிலையில் கென்யாவில் உள்ள இலங்கைத் தூதுவர் பணயக் கைதியாக வைக்கப்பட்டுள்ள பொறியியலாளருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

இந்தத் தகவல்கள் கப்பலின் உரிமையாளர்களான ஓமானின் ஜலாம் நிறுவனத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக சோமாலியா கொள்ளையர்களினால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட மூன்றாவது இலங்கையர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (து-9)

# பிறப்புகளைப் பதிவு செய்ய நடமாடும் சேவை

(கொழும்பு)

பதிவாளர் நாயகம் திணைக்களம் பிறப்புக்களைப் பதிவு செய்ய நடமாடும் சேவைத்திட்டமொன்றை அமுல் செய்யவுள்ளது.

இந்தத் திட்டம் நாடளாவிய ரீதியில் அமுல் செய்யப்படுமென்று பதிவாளர் நாயகம் எல்.கே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

மாவட்ட பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் தோறும் பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டிராதவர்களைப் பற்றிய தகவல்களைக் கண்டறிந்து அவர்களுக்கான உரிய ஆவணங்களைப் பெற்றுத்தரப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் சமீபத்திய அறிக்கையின் பிரகாரம் இலங்கையில் 10 சதவீதமான பிறப்புக்கள் பதிவு செய்யப்படுவதில்லல எனவும் தோட்டப் பகுதிகளிலும் பின்தங்கிய பிரதேசங்களிலும் வாழும் மக்கள் பிறப்புக்களைப் பதிவு செய்வது குறித்து அதிகம் அக்கறை காட்டுவதில்லையெனவும் தெரிகிறது. (து-7)

# அங்கவீனர்களை அரவணைக்கும் நாடாக இலங்கை மாறவேண்டும்

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

அங்கவீனர்களுக்கு சமுதாயத்தில் சம அந்தஸ்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ளுமென்று பிரதமர் ரட்ணசிறி விக்கரமநாயக்க தெரிவித்தார்.

அங்கவீனர்களை அரவணைக்கின்ற நாடாக இலங்கையை மாற்றியமைக்க வேண்டுமெனவும் அதற்காக அரசாங்கம் பல திட்டங்களை முன்னெடுக்க விருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

அங்கவீனர்களுக்கு உதவும் வகையில் செயற்படும் நிறுவனங்களுக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற திவிஜெய என்னும் விருது வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பிரதமர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

இவ்வாறு அங்கவீனர்களை வலுவூட்டும் செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைப்புக்கள் இந்த விருது வழங்கும் வைபவத்தை ஏற்பாடு செய்தன.

அங்கவீனர்களுக்கு நன்மை அளிக்கும் வகையில், பல புதிய சட்டங்கள் விரைவில் ஏற்படுத்துவதன் அவசியம் குறித்தும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இலங்கையில் உள்ள அங்கவீனர்களை நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்கு கொள்ளவைக்கும் நோக்குடன் அங்கவீனர்களை வலுவூட்டுவதற்கான அமைப்பு நிறுவப்பட்டதாக அதன் தலைவர் சாமேன் வெந்த கோபன் தெரிவித்தார். (க-7)

# ரயில் சேவைகளை விஸ்தரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

சீன நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் உள்ளூர் ரயில் சேவைகளை விஸ்தரிப்பதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் கே.ஏ.பி. பிரேமசிறி தெரிவித் துள்ளார்.

100 ரயில் பெட்டிகளையும் 15 பவர் செட் என்ஜின்களையும் கொள்வனவு செய்வது தொடர்பான ஒப்பந்தத்தில் சீன நிறுவனமும் ரயில்வே திணைக்களமும் கடந்த வெள்ளியன்று கைச்சாத்திட்டன.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அடுத்து வரும் ஒன்பது மாதங்களுக்குள் 100ரயில் பெட்டிகளும் 15 பவர் செட் என்ஜின்களும் இறக்குமதி செய்யப்படும் என பொதுமுகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

ஒவ்வொரு ரயில் பெட்டியிலும் ஆயிரம் பிரயாணிகள் பயணம் செய்யமுடியும். அத்தோடு வேகமாகவும் துரிதமாகவும் சேவைகளை புதிய பவர் செட் என்ஜின்கள் மூலம் வழங்க முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது. போக்குவரத்து பெற்றோலிய வளத்துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸியின்வேண்டுகோளின்பேரிலேயே சீன நிறுவனத்துடன் குறித்த ஒப்பந்தம் செய்யப் பட்டது. (க-7)

# 108 கலச அபிஷேக ஸ்கந்த ஹோமபெருவிழா

(யாழ்ப்பாணம்)

உசன் ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தில் 108 கலச அபிஷேக ஸ்கந்த ஹோம பெருவிழா எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அருள்வாக்குச் சித்த குக ஸ்ரீ ரத்தின கேதீஸ்வரசுவாமிகளின் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-9)

# மாணவர் தாதி பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

தாதிமார் பயிற்சி கல்லூரிகளில் மாணவர் தாதி பயிற்சிநெறிக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்களை சுகாதார பராமரிப்பு மற்றும் போசனை அமைச்சு கோரியுள்ளது.

இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பதற்கு 2004ஆம் ஆண்டில் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் குறைந்த பட்சம் 3 விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு க.பொ.த சாதாரணப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் தாய்மொழியுடன் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 4 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்கவேண்டும்.

மேலும் விவாகமாகாத 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட இருபாலரும் இதற்கு விண்ணப்பிக்க முடியுமென்றும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய தாயரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி பணிப்பாளர் -1. சுகாதார பராமரிப்பு போசணை அமைச்சு இல 385 வண பத்தேகம விமல் வங்ச தேரர் மாவத்தை கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-9)

## — சந்தேக நபர்களை — பிணையில் விடுதலை செய்க!

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் போரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு பேரை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விடயங்களை எதிர்வரும் 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளது.

இவ்வமைச்சரின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 2 பேருக்கு எதிராக போதுமான சாட்சியங்கள் இல்லாத நிலையில் பிணையில் விடுதலை செய்யுமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-7)

## ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் மூலம் யுத்த அபாயம் நீங்கியுள்ளதாம் அமைச்சர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

ஜெனீவா பேச்சுவார்த்தைகள் மூலம் நாட்டில் காணப்பட்ட யுத்த அபாயம் நீங்கியுள்ளதாக விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நாட்டில் தற்போது வன்முறைகள் குறைவடைந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது என்றும் அவர் கூறினார்.

அமைச்சர் இவ் விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஜெனீவாவில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதற்கு முன்னர் நாட்டில் யுத்தமொன்று வெடிக்கும் அபாயம் இருந்தது.

புலிகளும் அரசாங்கப் பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசியதன் பயனாக யுத்த அபாயம் நீக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த பின்னர் பலர் பல விமர்சனங்களை முன்வைக்கலாம்.

ஆனால் ஜெனீவா பேச்சுவார்த்தைகள் மூலம் நாட்டிற்கு நன்மையே கிடைத்துள்ளது என்பதனை அனைவருக்கும் புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (க)

## வாக்குச் சீட்டு அச்சிடும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே அச்சிடப்பட்ட வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 13ஆம் திகதி தபாலில் இடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

வாக்களார் அட்டைகளை விநியோகிப்பதற்காக 7 ஆயிரத்து 500 தபால் ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேர்தல்கள் ஆணையாளரால் வாக்காளர் அட்டை விநியோகிக்கும் விசேட தினமாக எதிர்வரும் 19ஆம் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வாக்காளர் அட்டைகளை விநியோகிக்ககும் நடவடிக்கைகளை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்துள்ளதாக தபால் மா அதிபர் சேனாவீர தெரிவித்தார்.

இவ்வாறு தபால் மூல வாக்களிப்புப் பத்திரங்கள் அடங்கிய பாதுகாக்கப்பட்ட பொதிகள் எதிர்வரும் 9ஆம் திகதி தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளது.

அவற்றை உடன் அரச திணைக்கள பிரதான அதிகாரிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தபால் மா அதிபர் குறிப்பிட்டார்.

வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-7)

## பணம் செலுத்தாத விவசாயிகளும் ஓய்வூதியத்தில் இணைக்கப்படுவர்

விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் கீழ் ஓய்வூதியத்துக்கு பங்களிப்புச் செய்துள்ள விவசாயிகளின் ஓய்வூதியக் கொடுப்பனவு உறுதிகளைப் புதுப்பிக்கும் செயற்திட்டமொன்றை ஆரம்பிக்கப் போவதாக அதன் தலைவர் நாமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்தக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 7 இலட்சத்து 60 விவசாயிகள் காப்புறுதிகளைப் பெற்றுள்ளனர். இதில் அநேகமானோர் தொடர்ந்தும் அங்கத்துவப் பணம் செலுத்தாமையினால் இத்திட்டம் செயலிழந்து காணப்படுகிறது.

இவ்வாறான விவசாயிகளை மீண்டும் ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக சபையின் தலைவர் தெரிவித்தார். (க-7)

# முரண்பாடுகள் வலுவடைந்து செல்லுமானால் 'ஏப்ரல் பேச்சுக்கள்' சீர்குலையும் அபாயம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தை கடந்த மாதம் 22ஆம், 23ஆம் திகதிகளில் ஜெனீவாவில் மிகவும் கடினமாகவே அமைந்திருந்ததாக பலரும் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இதேவேளை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் பேச்சுக்கள் மேலும் கடினமானதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனெனில், முதல் சுற்றுப் பேச்சுக்களில் போர் நிறுத்த உடன்படிக்கையை முறையாக நடைமுறைப்படுத்துவது மற்றும் வடக்கு கிழக்கில் சகஜ நிலையை விரைவில் தோற்றுவிப்பது ஆகிய விடயங்களே முக்கியமாக ஆராயப்பட்டன.

ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் பேச்சுக்களில் முதற்கட்ட பேச்சுக்களில் இணங்கப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக இருதரப்பினரும் கடும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோன்று, ஏப்ரலுக் கிடைப்பட்ட காலத்தில் போர் நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதே எதிர்காலப் பேச்சுக்களை நிர்ணயிக்கவுள்ளன.

அவ்வாறு அவை நடைமுறைப் படுத்தப்பட தவறும் பட்சத்தில் ஏப்ரல் பேச்சுக்கள் நடைபெறாமலிருப்பதற்கான சாத்தியக் கூறுகளுமுண்டு என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஜெனீவாவில் இணங்கியமைக்கமைவாக சர்ச்சைக்குரிய தமிழ் துணை படையினரின் ஆயுதங்களை களைய வேண்டும் என புலிகள் எதிர்பார்க்கும் அதேவேளை, புலிகள் அநாவசியமான வன்முறைகள், தாக்குதல்களை கைவிட வேண்டும் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

படையினர் சிவிலியங்கள் மீதான தாக்குதல்கள் என்பவற்றை புலிகள் கைவிட்டு ஜெனீவாவில் இணங்கப்பட்ட விடயங்களை புலிகள் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். அதிலிருந்து பின்வாங்கப் கூடாது எனவும் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

ஆனால் அதற்கு விடுதலைப் புலிகள் சம்மதிப்பார்களா என்பது கேள்வி. இதனால் ஏப்ரல் மாதத்தில் பேச்சுக்கள் இடம்பெறுவது என்பதும் சந்தேகமாகவே உள்ளது என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (க-4-5)

## அங்கவீனர்களுக்கான உதவித் திட்டங்கள்

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டு அங்கவீனர்களாகியுள்ள மக்களின் நலன் கருதி சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பரந்தளவிலான உதவித் திட்டங்களை ஆரம்பித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் அரச கட்டுப்பாடற்ற பகுதிகள் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் தமது அன்றாட அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து கொள்ள இயலாத நிலையில் வாழ்ந்து வரும் அங்கவீனமடைந்துள்ள மக்களுக்கு வீடமைப்பு வசதிகள், சுயதொழில் துறைகளை உருவாக்குவதற்கான மூலதன வசதிகள், மருத்துவ வசதிகள், வலது குறைந்தோருக்கான உபகரணங்களை வழங்குதல் உட்பட பல நலன் சார்ந்த உதவிகளை அமைச்சர் ஆரம்பித்துள்ளதுடன் மேற்படி உதவிகள் வழங்கும் திட்டத்தை உடனடியாக வடக்கு - கிழக்கு பகுதிகளில் பரவலாக்கும் படி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை வலது குறைந்தோருக்கான பராமரிப்பு இல்லங்களில் குறைபாடுகள் நிலவுமேயானால் அதனை உடனடியத் தனது கவனத்துக்கு கொண்டு வரும் படியும் அவர் வலது குறைந்தவர்களுக்கான பராமரிப்பு இல்ல நிர்வாகிகளை கேட்டுள்ளார். (து-7)

## ஆசிரியர் நியமனத்தை விரைவுபடுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரியின் கற்பித்தல் டிப்போமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 200க்கும் மேற்பட்ட முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கட்கு கற்கைநெறி முடிவடைந்து இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவில்லையே தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாணவர்கள் தமது கற்கைநெறி முடிவடைந்துள்ள நிலையில் பட்டச்சான்றிதழும் இன்னமும் தமக்கு வழங்கப்படவில்லையெனவும் ஏனைய மாவட்டங்களில் இவை வழங்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளதுடன் தமது ஆசிரிய நியமனத்தை விரைவுபடுத்துமாறும் சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். (க-101)


## சிவாச்சார்ய அபிஷேக அழைப்பு

(குருப்பட்டம் வழங்குதல்)

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் உத்தராயண புண்ணியகாலம் மாசி மாதம் 19ம் நாள் (03-03-2006) வெள்ளிக்கிழமை சதுர்த்தித் திதியும் ரேவதி நட்சத்திரமும் கூடிய காலை 6.00 முதல் 7.00 மணி வரையிலான கும்பலக்கின சுபமுகூர்த்தத்தில்

பிரம்மஸ்ரீ ச. சர்வேஸ்வர சர்மா (சபா) அவர்களுக்கு

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில்

சமய, விசேஷ, நிர்வாண தீக்ஷைகள் வழங்கப் பெற்று ஆசார்யாபிஷேகம் நிகழ்த்தி வைக்க ஜகன்மாதாக்களாகிய நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாளினதும், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளினதும் திருவருளை முன்னிட்டுப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் மேற்படி முகூர்த்தத்திற்கு வருகைதந்து சிறப்பித்து ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தீக்ஷாகுரு:

சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக் குருக்கள்

(சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி)

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான குரு

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தான குரு

அருளாசி நல்கும் குருமணிகள்:

டாக்டர் பிரம்மஸ்ரீ A.G ஸ்ரீநிவாச சாஸ்திரிகள்

(ஸ்ரீ கபாலீஸ்வரர் திருக்கோவில், மயிலாப்பூர்)

சிவஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள்

(அதிபர், தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்)

இங்ஙனம்,

பிரம்மஸ்ரீ. ச.சர்வேஸ்வர சர்மா, ஸ்ரீமதி காதம்பரி தம்பதிகள்

ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானம், சுதுமலை, மானிப்பாய்.

சிவஸ்ரீ ச.சச்சிதானந்தக்குருக்கள் தம்பதிகள்
வேலம்பிராய்.

சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள் தம்பதிகள்
சுதுமலை.

# கவனிப்பாரற்ற நிலையில் கொழும்புத்துறை யோகர் சுவாமி மகளிர் ஆச்சிரமம்

உலகம் உவந்தேற்றும் உயர் நிலையில் உள்ளவர் யோகர் சுவாமிகள். அவர் பெயரில் யாழ்ப்பாணம் புங்கங்குளம் வீதி கொழும்புத்துறையில் உள்ள மகளிர் ஆச்சிரமம் அனைத்து வசதிகளையும் கொண்டுள்ள ஒரு அழகான கண்கவர் கட்டடமாக அமைக்கப்பட்டுள்ளது. இதனை கட்டியெழுப்பியவர் கரம்பனைச் சார்ந்த மறைந்த மருத்துவர் நடராசா ஆவார். தொடக்கத்தில் இவ் ஆச்சிரமம் யோகர் சுவாமிகளின் அடியார்களின் அரவணைப்பில் சீரோடும் சிறப்போடும் விளங்கியது.

பண்புடைமையின் திருவுருமாகவும், யோகர் சுவாமிகளின் அடியவர்களாகவும் விளங்கிய முருகேசு என்பவரின் புதல்விகளான அக்கா தங்கை ஆகிய இருவராவர். இவ் ஆச்சிரம் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டது. இவர்கள் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, அரியாலை கனகரெத்தினம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியர்களாக பணியாற்றியவர்கள். இவர்களின் மறைவை அடுத்து வெவ்வேறு அடியவர்கள் பொறுப்பை ஏற்றனர். அப்பொழுது ஓரளவு சிறப்பாக இயங்கியது. பின்பு புங்குடுதீவைச் சார்ந்த சர்வோதய இயக்கத்தைச் சார்ந்த திருநாவுக்கரசு தலைமையிலும் இது இயங்கியது.

*இவ் ஆச்சிரமத்தைப் பொறுப்பற்றவர் ஏற்ற நிலையில் இங்கிருந்த பிள்ளைகளின் நிலை என்ன?*

நாட்டுப் பிரச்சினை காரணமாக கட்டடமும் தாக்குதலுக்கு ஆளான நிலையில் நீண்டகாலமாகச் செயலற்று இயங்காது இருந்தது. பின்பு இதனை யோகர்சுவாமியின் அடியவராகிய செல்லத்துரை அடிகள் பெறுப்பேற்க முன் வந்தார். இவர் காங்கேசன் துறை வீதியில் உள்ள சிவத்தொண்டன் நிலையத்தில் இருந்து இதனை நடாத்த முயன்றார்.

அகவை முதிர்ச்சி காரணமாக இவரால் தம் பணியைத் தொடர இயலாது போனதால் ஒரு இளைய அடியவரிடம் இவ் ஆச்சிரமம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் இவ் இளைய சாமி ஒரு கேள்விக்குறியாக விளங்கியதனால் இவ் ஆச்சிரமம் முறையாக இயங்காத நிலையில் அவல நிலைக்கு ஆளாகியது. யோகர் சுவாமியார் மகளிர் ஆச்சிரமம் என்பது இவ் ஆச்சிரமத்தின் பெயர். ஆனால் இங்கு பணிபுரிந்த சாமியார் பற்றுச் சீட்டுக்களை காயத்திரி மந்திர ஆச்சிரமத்தின் பெயரில் வழங்கினார். இவர் காஞ்சி காமகோடி வழங்கியதாகச் சொல்லப்பட்ட ஓட்டோவில் மொட்டாக்குப் போட்ட நிலையில் ஓடித்திருந்தார். ஏன் இத்தகைய முரண்பாடு எனக் கேட்ட போது ஆத்திரத்திற்கு ஆளானார். இன்று உயிருடன் வாழும் யோகர் சுவாமிகளின் மூத்த அடியவர்களில் ஒருவன் என்ற முறையில் நான் முரண்பட்டதன் காரணமாக எனக்கு ஆச்சிரமத்திற்கு வருவதற்குத் தடை விதிக்கப்பட்டது. இவ் ஆச்சிரமத்தில் இருந்த பிள்ளைகள் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் பயின்றனர்.

பின்பு சடுதியாகத் திருநெல்வேலி ஆச்சிரமத்திற்கு இப்பிள்ளைகள் மாற்றப்பட்டனர். அவர்களின் இன்றைய நிலையாதோ என அறியோம். அவர்களுக்கு தொடர்ந்தும் கற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டதோ அல்லது அவர்களின் படிப்பு இடைநிறுத்தப்பட்டதோ ஒன்றும் தெரியாத நிலையில்தான் நாம் இருக்கிறோம்.

கொழும்புத்துறை யோகர் சுவாமி மகளிர் ஆச்சிரமத்தில் பணி புரிந்த கேள்விக்குறியான சாமி இங்கிருந்து வெளியேறி பல்வேறு இடங்களில் குடிகொண்டு இறுதியில் மீசாலையில் ஓர் ஆச்சிரமம் அமைத்ததாகவும் இச்சாமியுமும் இவரோடு சேர்ந்த குழுவும் கேள்விக்குறியாக இயங்கியதனால் ஒரு குழுவினால் கடுமையாகத் தாக்கப்பட்டு கேட்பார் அற்ற நிலையில் தெருவோரத்தில் கிடந்தாகவும் பின்பு இவர் கொழும்பு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாகவும் செய்தி இதழில் வெளிவந்தன. இவரின் ஆச்சிரமத் தளபாடங்கள் உடைக்கப்பட்டதாகவும் ஆச்சிரமக் கட்டம் பாதிக்கப்பட்டதாகவும் செய்திகள் வாயிலாக அறிகிறோம்.

இவ் ஆச்சிரமத்தைப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் படித்தவர்களாய், பண்புள்ளவர்களாய், பொறுப்புள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். படித்த, பண்புள்ள ஒரு பெண்ணே இம் மகளிர் ஆச்சிரமத்திற்குப் பொறுப்பாக இருக்க வேண்டும். இவ் விடயம் ஓட்டி பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களின் மனைவி மனோன்மணி அம்மையாருடன் உரையாடியுள்ள போது அவர் எம் கருத்திற்கு முழுமையாக செவி சாய்த்து தான் இன்னுமொரு ஆச்சிரமத்திற்கு பொறுப்பாய் இருப்பதனால் இவ் ஆச்சிரமத்தைத் தான் பொறுப்பேற்க முடியாது என வருத்தத்தோடு தெரிவித்தார்.

இன்று யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டுக் கொண்டு மாடி வீடுகளும், மாடமாளிகைகளும், கோபுரங்களும் கட்டப்படுகின்றன. கோபுரங்கள் கட்டுவதனால் இறைவனின் அன்பைப் பெறலாம் என்று எம்மை நாம் ஏமாற்றுவதை விடுத்து ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்து அவ் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பது தான் ஏற்புடையது. இனப்படுகொலையினாலும், கடல்கோளினாலும் பாதிக்கப்பட்டுள்ள தாயோ, தந்தையோ அல்லது இருவரும் அற்ற அநாதைப் பிள்ளைகள் குறிப்பாகப் பெண் பிள்ளைகள் வாழ்வு பெற பணியாற்றுவது தமிழ் சமூகத்தின் தலையாய கடமையாகும். எம் கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இப்பணியை மேற்கொள்ள பொறுப்புள்ளவர்கள் எவர் முன்வந்தாலும் அவர்களுக்கு என் உதவி என்றென்றும் உண்டு.

மா.க.ஈழவேந்தன்.
நாடாளுமன்ற உறுப்பினர்.

## சிவாராத்திரி தினவிழாவில் படையினர்

நகுலேஸ்வரம் ஆலயத்தில் கடந்த 26ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை விசேட பூசை நடைபெற்றது. அப்பூசையில் கலந்து கொள்ள இராணுவ அதிகாரிகளுடன் சிப்பாய்களும் வருகை தந்திருந்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அவர்கள் கோயில் பூமியில் சமாதானத்திற்காக வேண்டி பல தென்னங்கன்றுகள் நாட்டி வைத்தனர். மேற்படி ஆலயத்தில் அன்று முழுநாளும் நடைபெற்ற பூசைகளில் ஆயிரக்கனக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர். (க)

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் பவள விழாவை முன்னிட்டு 'பவளவிழா மலர்' வெளியிடப்படவுள்ளது.

இதனால் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள் வரலாற்று, நிகழ்வுகள் அது சம்பந்தமான புகைப்படங்கள் ஆகியவற்றை சங்கம் சேகரித்து வருகின்றது.

இதனால் ஆரம்ப கால உறுப்பினர்களை 0094212223038, 0094212223896 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அவற்றை 25.05.2006 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (க-7)

## விண்ணப்பிக்கலாம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க பவள விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட முன்னணி விளையாட்டுக் கழகங்களிற்கிடையே 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட 7 வீரர்கள் பங்கு பற்றும் மாபெரும் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.

இச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் விண்ணப்பபடிவங்களைப் இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து செயலாளர் இந்து வாலிபர் சங்கம் வட்டுக்கோட்டை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ் விண்ணப்பப் படிவங்களை வலம்புரி அலுவலகத்திலும், வட்டு இந்து வாலிபர் சங்கத்திலும், யாழ் நவீன செலுலர் போன் சொப்பிலும் பெற்றுக் கொள்ளலாம்.

இச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (க-7)

# நிவாரணம் வழங்கக் கோரி அரச அதிபருக்கு மகஜர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பெரிய மாவடி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர் தமக்கு கடற்றொழில் நிவாரணம் வழங்கக்கோரி யாழ் அரச அதிபருக்கு மகஜர் ஒன்றை கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ளனர்.

அம் மகஜரில்,

தமது சங்கத்தின் மீனவ தொழிலாளர்கட்கு கடந்த காலத்தில் வழங்கப்பட்டு வந்த கடற்றொழில் நிவாரணங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக' சுட்டிக்காட்டிய கடற்றொழிலாளர் சங்கம் தமது தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி நிவாரணமும் வழங்கப்படவில்லை என்றும், இதனால் நிரந்தரமான மீனவ தொழிலை செய்ய முடியாமல் வருமான பற்றாக்குறையால் அன்றாட வாழ்க்கையில் மிகவும் சிரமத்தை அனுபவித்து கொண்டு இருக்கிறார்கள் எனவே தொடர்ந்து கடற்றொழிலாளர்களுக்குரிய கடற்தொழில் நிவாரணங்களை பெற்றுத் தரவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-108)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யா /வைத்தீஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி அதிபர் என்.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ரி.ராஜலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (க-132,133)

* * *

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வேதநாயகி பேரின்பநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (க-132, 133)

## சந்திப்பு

மேலதிக கல்விப் பணிப்பாளர் மற்றும் 5 வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதிக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இன்று காலை 11 மணிக்கு காங்கேசன் துறை படைமுகாமில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க-132, 133)

## சேவை நலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெற்ற கோப்பாய்க் கோட்டதுக்குப்பட்ட அதிபர் ஆசிரியர்களுக்கும் சேவைக்கால ஆலோசகர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா எதிர்வரும் 5ஆம் திகதி யா /கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு சங்கத் தலைவர் சி.சித்திரவடிவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது (க-133,134)

# படையினர் நடாத்திய மருத்துவ முகாம்

யாழ்ப்பாணத்தில் 55ஆவது சேனையகத்தின் கீழ் 554ஆவது படையணியினால் நிர்வகிக்கப்படும் படைப்பிரிவின் அருகில் உள்ள உசன், தவுசிக்குளம், கெற்பேலி, பலாலி, மிரியன்காடு, விடத்தற்பளை ஆகிய கிராமசேவகர் பிரிவுகளின் உள்ள மக்களுக்காகவும்,

52வது சேனையகத்தின் கீழ் 524வது படையணியினால் நிர்வாகிக்கப்படும் படைப் பிரிவுகளின் அருகில் உள்ள கற்கோவளம் கிராமசேவகர் பிரிவுகளிலும் கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய இரு தினங்களிலும் காலையில் இருந்து இராணுவ வைத்தியர்களினால் மருத்துவ சேவைகள் நடாத்தப்பட்டன.

554ஆவது பட்டயணி பகுதியில் கெற்பேலி பிறாத்தமிக்க பாடசாலையில் 500 கிராம சுகாதார சேவைகளில் கலந்து உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொண்டனர். இந்த மருத்துவ சேவையில் இராணுவ வைத்தியசாலையைச் சோந்த இரண்டு விசேட வைத்திய அதிகாரிகளும் மற்றும் வைத்திய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சிறு குழந்தைகளுக்காக இவ் வைத்திய குழுக்களினால் கொண்டு வரப்பட்ட விளையாட்டுப் பொருட்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

யாழ். மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் வேண்டுகோளுக்கும் வழிகாட்டல்களுக்கும் அமைய அவரின் வேண்டுகோளின்படி இராணுவ வைத்தியசாலையின் இந்த இலவச வைத்திய முகாமை நடாத்துவதற்குத் தேவையான மருந்துப் பொருட்களும் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

இன்னும் இப்படியான வைத்திய உதவிகள் முகாம்களை கஷ்டப்பிரதேசங்களில் 06 மாதத்திற்கு ஒரு தடவை நடாத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக உயர் வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளார். (து)

## சமுர்த்தி முத்திரை பெறுமதி அதிகரிப்பு

சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளின் முத்திரை பெறுமதி அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இவ் அதிகரிப்பு அமுலுக்கு வந்துள்ளது.

அதன்படி 250 பெறுமதியான முத்திரை 375 ரூபாவாகவும், 350 பெறுமதியான முத்திரை 525 ரூபாவாகவும், 600 பெறுமதியான முத்திரை 900 ரூபாவா கவும் 1000 பெறுமதியான முத்திரை 1500 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

600 ரூபா 1000 ரூபா முத்திரை பயனிகளுக்கான சமூக பாதுகாப்பு நிதி கட்டாய சேமிப்பு நிதி என்பன 50 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து-108)

# கைத்தறித் தொழிலாளர்களுக்கு ஆறு மாத காலப் பயிற்சி

கைத்தறித் தொழிலாளர்களுக்கு 6 மாத காலப் பயிற்சியையும், 2 ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவையும் வழங்குவதற்கு புடைவைக் கைத்தொழில் அபிவிருத்தியமைச்சு முன் வந்துள்ளது.

அமைச்சர் ஜயதிஸ்ஸ ரணவீர இது பற்றிக் கருத்து தெரிவிக்கையில், பயிற்சிக் காலம் முடிவடைந்ததும் பயிற்சி பெற்றவர்களுக்கு கைத்தறியும், நூலும் வழங்கப்படும் என்றும்,

அத்துடன் அவர்களால் தயாரிக்கப்படும் கைத்தறி துணிவகைகளை நியாயமான நிலையில் விற்பனை செய்வதற்கு கொழும்பில் நிலையமொன்றும் அமைக்கப்படவுள்ளது என்றும், இத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி உதவி பெறுகின்ற பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமென்றும் மேலும் இத்துடன் கைத்தறி புடைவை உற்பத்திக் கிராமங்களும் அமைக்கப்படுமென்று மேலும் தெரிவித்தார். (க-7)

## ஆன்மீக தொடர் சொற்பொழிவு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆன்மீக தொடர் சொற்பொழிவு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவினை கலைச்சுடர் சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் 'சூர்மா மடியத்தொடு வேலவனே' எனும் விடயம் குறித்து சொற்பொழிவாற்றவுள்ளார். (க-9)




## ஜலதோஷத்துக்கு மருந்து

குடி குடியை கெடுக்கும் என்பார்கள். மது போத்தல்களிலேயே அதைக் கவனிக்க முடியும். அறிவியல் அறிஞர்கள் தீவிர ஆராய்ச்சியை மேற்கொண்டு சிறிதளவு மது அருந்துவதால் இதய நோயை கட்டுப் படுத்தமுடியும் என்பதைக் கண்டுபிடித்தார்கள். தற்போதைய ஆராய்ச்சியில் டானிக் போல சிறிதளவு மது அருந்துவதன் மூலம் ஜலதோஷம் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தலாம் என்கின்றனர்.

ஹாவார்டு பள்ளியைச் சேர்ந்த டாக்டர் மிக்யுஸ் எ.ஹெர்னன் என்பவர் ஒயின் சாப்பிடக் கூடிய 4272 பேரிடம் 5 வருடங்களாக ஆராய்ச்சியை மேற்கொண்டார். அவர்களுக்கு ஜலதோஷம் ஏற்படுவது குறைவாக உள்ளது என்கிறார். ஒரு வாரத்திற்கு பதினான்கு கப் ஒயின் குடிப்பார்களேயானால் நாற்பது சதவீத அளவிற்கு ஜலதோஷம் கட்டுப்படுத்தப் படுகிறது. அதிலும் குறிப்பாக சிவப்பு ஒயின் குடிப்பவர்கள் எனில் ஜலதோஷம் தாக்குவது கணிசமாக குறைகிறது.

ஒயின் குடிப்பவர்கள் ஆண்களாக இருந்தால் வருடத்திற்கு 1.1 தடவையும், பெண்களாக இருந்தால் 1.7 தடவையும் ஜலதோஷம் ஏற்படுகிறது. ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆராய்ச்சியாக குழந்தைகள், புகை பிடிப்பவர்கள், ஒவ்வாமை உடையவர்கள் என்று பலரிடமும் ஆராய்ச்சியை நடத்தினார்கள். முடிவில் குறைந்த அளவில் ஒயின் குடிப்பதால் ஜலதோஷம் வராமல் தடுக்கலாமென்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

## குழந்தைகளின் பற்களைப் பாதுகாக்க...




குழந்தைகளின் பற்கள் சிறு வயது முதலே பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு அந்தக் குழந்தைகளின் பெற்றோர்கள் உதவ வேண்டும். சுலபமாக இருக்கிறதென்று குழந்தைக்குப் பற்பொடியை தேய்க்கக் கொடுக்க கூடாது. இதனால் பல்தான் தேய்ந்து போகும். பேபி டூத் பிரஷ் மூலம் பல் துலக்கப் பழக்க வேண்டும். அவ்வப்போது தற்காப்பாக பல் டாக்டரிடம் காட்டி வந்தால் பற்களின் அமைப்பு, அதை ஒட்டிய முக அமைப்பு சரியாக உருவாக உதவும்.

சாக்லேட், இனிப்பு, ஐஸ்கிரீம் போன்றவைகளை குழந்தைகளுக்கு கொடுக்கக் கூடாது. இது அவர்களின் பற்களின் சீரழிவுக்கு வழிவகுத்து விடும். அதற்கு மாறாக கடித்து மென்று சாப்பிடக் கூடிய காய்கறிகள், பழங்களைக் கொடுக்கலாம். ஆப்பிள், தக்காளி, முள்ளங்கி, வெள்ளரிக்காய் சாப்பிடக் கொடுக்கலாம். இவை பற்களுக்கு நல்ல பயிற்சி அளிக்க கூடியதாகும்.

குழந்தையின் பற்களின் இடுக்கில் உணவுப் பொருள் சேர்ந்து விடாமல் தடுக்கும் வகையில் பெற்றோர் பல் துலக்கி விட வேண்டும். எந்தப் பொருளையும் மிகவும் சூடாகவோ, குளிர்ச்சியாகவோ சாப்பிட கொடுக்க வேண்டாம். இதுவும் குழந்தைகளின் பற்களுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தி விடும்.

## நுரையீரலையும் கவனியுங்கள்!

மனித உறுப்புகளில் எல்லாமே முக்கியமானதுதான். அதில் நுரையீரலும் அவசியமுள்ள ஒன்றாகவே கருதப்படுகிறது. நுரையீரல்களுக்குத் தேவையான சுத்தமான காற்று கிடைக்காவிட்டால் நமது முக்கிய உறுப்புகளும் அவற்றைக் கட்டுப்படுத்தும் மூளையில் உள்ள நரம்பு மண்டலத்தின் மையமும் அதன் காரணமாக இரத்தம் பாதிப்புக்குள்ளாகும். மேலும் நினைவு தப்புதல், மூச்சு வாங்குதல் போன்ற தொந்தரவுகள் ஏற்பட்டு உயிருக்கே ஆபத்தை விளைவித்து விடும்.



எனவே இந்த ஆபத்து ஏற்பட்டாலும் அல்லது மார்பில் அடைப்பு ஏற்பட்டு சுவாசத்திற்கு எந்த விதமான பாதிப்பு ஏற்பட்டாலும் உடனே பிராணவாயு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

நுரையீரலில் பாதிப்பு ஏற்பட்டிருப்பது தெரிய வந்தால் தேவையான முதலுதவிகளை அளித்துவிட்டு பாதிக்கப்பட்டவரை மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.

## நடைப் பயிற்சியின் அவசியம்

அறிவியல் ஆயிரம்


மனித ஆரோக்கியத்திற்கு உடற்பயிற்சி மிக அவசியமானதாகும். ஏழை, பணக்காரர் என்ற பேதமில்லாமல் அனைவருக்கும் உகந்த பயிற்சி நடைப் பயிற்சி.

பொதுவாக 40 வயதைக் கடந்தவர்கள் அனைவருமே நடைப் பயிற்சி மேற்கொள்வது மிக அவசியமானதாகும். தினமும் காலை நேரத்தில் 40 நிமிடங்கள் வரை நடக்கலாம். நடக்கத் தொடங்கும் போது முதல் 10 நிமிடங்கள் மெதுவாகவும் பின்னர் படிப்படியாக வேகத் தினை அதிகப்படுத்தியும் நடக்க வேண்டும். வாரத்தில் குறைந்தது ஐந்து முதல் ஆறு நாட்கள் வரைத் தொடர்ந்து நடைப்பயிற்சி செய்ய வேண்டும். உடற்பயிற்சி கருவிகளைக் கொண்டும் வீட்டில் சிறு சிறு பயிற்சிகளைச் செய்யலாம்.



சிறு வயது முதல் உடற் பயிற்சி செய்யும் பழக்கத்தை மேற்கொண்டு வந்தால் வாழ் நாள் முழுவதும் நோய் நொடி இல்லாத நல்ல ஆரோக்கியமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்.

## கண்ணில் கோளாறா?




சில முதியவர்களுக்கு கண் சிறிய வயதில் உள்ளதைப் போல் முதிய வயதிலும் மிக நன்றாகத் தெரியும். ஆனால் பலருக்கு அப்படித் தெரிவதில்லை.

பொதுவாக வயதான காலத்தில் கண்ணில் பார்வைக் குறைபாடு ஏற்படுவது இயற்கைதான். ஒருவர் வயதான பிறகும் கண்ணாடி அணியாமல் புத்தகம், பத்திரிகை போன்றவற்றைப் படிக்கிறார் என்றால், அவருக்கு கண்ணில் எந்தக் குறைபாடும் இல்லை, கண் நன்றாகத் தெரிகிறது என்று அர்த்தம் அல்ல. அவருக்கு கிட்டப் பார்வை சரியாக இருக்கிறது என்பது மட்டும்தான் உண்மை.

கண்ணில் மற்றக் குறைகள் இருக்கலாம். கண்ணில் கிளாகோமா போன்ற பழுது நோய்கள் இருக்கக்கூடும். விழித்திரையில் குறை இருக்கலாம். கண்ணாடி சரியாக இருந்து விட்டால் போதாது.

கட்ராக்ட் இருந்தால் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டியது மிக அவசியமாகும். சரியான நிலையில் பார்வை முன்பு இருந்த அளவுக்குத் திரும்பும். சில நேரங்களில் கண்ணாடி போட்டுக்கொள்ள வேண்டிய அவசியமும் நீங்கும் என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

## பௌர்ணமியில் குழந்தை பிறந்தால்...



ஒரு பெண் தாய்மை அடையும் போதுதான் அவள் முழுமை அடைகிறாள் எனலாம். எந்த ஒரு பெண்ணும் நல்ல குழந்தைகளைப் பெற்றெடுக்கவே விரும்புகிறாள்.

பௌர்ணமி, அமாவாசைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு மனநிலை பாதிப்புகள் ஏற்படுவதாக கருத்து நிலவுகிறது. இது குறித்து விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ச்சிகள் செய்தனர்.

அமெரிக்க நாட்டை சேர்ந்த குழந்தைகள் நல மருத்துவ விஞ்ஞானிகள் 1997ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை சுமார் அறுபத்து இரண்டு பௌர்ணமிகளில் பிறந்த 5 லட்சத்து 64 ஆயிரம் குழந்தைகளிடம் இதுபற்றி ஆராய்ச்சி செய்தனர். ஆராய்ச்சி முடிவில் பௌர்ணமிக்கும் குழந்தை பிறந்தலுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று உறுதி செய்யப்பட்டது. இங்கிலாந்தை சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் 51 பௌர்ணமிகளில் பிறந்த சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளிடம் ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். அவர்களது ஆராய்ச்சி முடிவிலும் பௌர்ணமிக்கும் குழந்தைகள் மன நிலை கோளாறுடன் பிறப்பதற்கும் நேரடி தொடர்பு இல்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பெரும்பாலான குழந்தைகளின் பிறப்பு என்பது கோடை காலங்கள் மற்றும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் நடைபெறுகிறது என்கிறார். இவ்வாறு அறிவியல் அறிஞர்களுடைய ஆய்வு முடிவுகளை ஒப்புநோக்கும் போது குழந்தை பிறப்பிற்கும் பௌர்ணமிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பது தெளிவாகிறது.

# தி.மு.க. கூட்டணி தொகுதிப் பங்கீடு தி.மு.க. 138 - காங்கிரஸ் 39

(சென்னை)

தி.மு.க.கூட்டணி கட்சிகள்இடையே தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. கூட்டணியில் ம.தி.மு.க சேர்ந்திருப்பதால் ஒவ்வொரு கட்சியும் தொகுதிகளை விட்டுக் கொர்டுக்க வேண்டும் என்று கருணாநிதி வேண்டுகோள் விடுத்தார். அதன்படி கூட்டணி கட்சிகளுக்கு தொகுதிகள் குறைக்கப்படுகிறது.

2001தேர்தலில் தி.மு.க. 177 தொகுதிகளில் போட்டியிட்டது. தற்போது 138 தொகுதிகளில் அக்கட்சி நிற்கும் என்று கூறப்படுகிறது.

காங்கிரஸுக்கு 39 தொகுதிகள் ஒதுக்கப்படும் என்று கூறப்படுகிறது. இக்கட்சி 2001தேர்தலில் அ.தி.மு.க கூட்டணியில் நின்றது. த.மா.கா.வும் காங்கிரஸும் இணைந்து 46 தொகுதிகளில் போட்டியிட்டது. தற்போது 60 தொகுதிகள் வரை எதிர்பார்த்து அதற்கான பட்டியலை கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பா.ம.க.வுக்கு 22 தொகுதிகள் ஒதுக்கப்படுகிறது. இக்கட்சி கடந்த முறை 27 தொகுதிகளில் போட்டியிட்டு 20 தொகுதிகளில் வென்றது. தற்போது 40 தொகுதிகள் வரை எதிர்பார்க்கிறது. அதற்கான பட்டியலையும் கொடுத்துள்ளது.

ம.தி.மு.கவுக்கு 20 தொகுதிகள் ஒதுக்கப்படுகிறது. கடந்த முறை தி.மு.கவுடன் தொகுதி பங்கீட்டில் பிரச்சினை ஏற்பட்டு தனித்து ம.தி.மு.க போட்டியிட்டது. 211 தொகுதிகளில் அக்கட்சி வேட்பாளர்கள் நின்றனர்.

மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சிக்கு 7 தொகுதிகளும் இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு 7 தொகுதிகளும் ஒதுக்கப்படுகிறது. முஸ்லிம்லீக் கட்சிக்கு 1 தொகுதி ஒதுக்கப்படுகிறது. (து)

# பாராளுமன்றத்தில் மோதுவதற்கு பாரதீய ஜனதாக் கட்சி முஸ்தீபு

(புதுடெல்லி)

மத்திய அரசுக்கு எதிராக 3 பிரச்சினைகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் மோதுவதற்கு பாரதீய ஜனதா வரிந்து கட்டுகிறது.

பாரதீய ஜனதா பாராளுமன்ற கட்சி ஆலோசனை கூட்டம் அதன் தலைவர் எல்.கே.அத்வானி தலைமையில் நேற்று முன்தினம் டெல்லியில் நடந்தது.

கூட்டத்தில் மூத்த தலைவர்கள், எம்.பிக்கள் கலந்துகொண்டனர். சுமார் 45 நிமிடம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மத்தியில் ஆட்சியில் இருக்கும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் சமீபகால நடவடிக்கைகள் மற்று அதனை எதிர்த்து பாரதீய ஜனதா கட்சி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் எதிர்ப்பு குரல் மத்திய அரசின் ஊழல், சிறுபான்மை ஆதரவு தன்மை, ஜனநாயக விரோதப் போக்கு ஆகிய பிரச்சினைகளுக்கு எதிராக பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் குரல் கொடுப்பது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கூட்டம் முடிந்ததும் இதுபற்றி செய்தித் தொடர்பாளர் வி.கே.மல்கோத்ரா கூறியதாவது;

இத்தாலி தொழில் அதிபர் குவாத்ரோச்சியின் வங்கி கணக்கு முடக்கத்தை இரத்து செய்தது உட்பட ஊழல் விவகாரங்கள், காஷ்மீருக்கு கூடுதல் தன்னாட்சி, சுயாட்சி வழங்குவது பற்றிய பிரதமரின் கருத்து, ஆந்திர அரசின் சிறுபான்மையினருக்கு வழங்கிய இட ஒதுக்கீடு மற்றும் பீகார் சட்டசபை கலைப்பில் மத்திய அரசு கையாண்ட ஜனநாயக விரோதப் போக்கு, அதற்கு மேல் நீதிமன்றம் தெரிவித்த கண்டனம் போன்ற பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்ப முடிவு செய்துள்ளோம் என்றார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய அத்வானி மத்திய அரசின் போக்கை கடுமையாக விமர்சனம் செய்தார். அவர் கூறும் போது, காங்கிரஸ் கூட்டணி அரசு தேசநலனுக்கு ஆபத்து உருவாகும் வகையில் தவறுக்கு மேல் தவறு செய்து வருகிறது.

இந்தப் பிரச்சினைகளை நமது எம்.பிக்கள் தொடர்ந்து கிளப்ப வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சமீபத்தில் பீகார் மாநிலத்தில் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது போல மேற்கு வங்காளத்திலும் சட்டசபை தேர்தலை நேர்மையாக தேர்தல் கமிஷன் நடத்த வேண்டும் என்றும் அத்வானி நம்பிக்கை தெரிவித்தார்.

எனவே நடப்பு பாராளுமன்ற கூட்டத் தொடரில் பாரதீய ஜனதா எம்.பிக்கள் மத்திய அரசுக்கு எதிராக புயலைக் கிளப்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# மொபைல் போன் மூலம் வாக்கு கேட்கும் தி.மு.க.

(சென்னை)

மொபைல் போன் மூலம் ஆசிரியர்களிடம் வாக்கு சேகரிக்கும் பணியில் தி.மு.கவினர் ஈடுபட்டுள்ளனர்.

சில மாதங்களில் தமிழக சட்டசபைக்கு தேர்தல் நடக்கவுள்ளது. இதற்கான திகதி இம்மாதத்தில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தலுக்கான அனைத்து பணிகளையும் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. துவங்கியுள்ளன. தி.மு.க கூட்டணியில் இதுவரை தொகுதி பங்கீடு, வேட்பாளர் பட்டியல் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. இருப்பினும் மொபைல் போன் மூலம் வாக்கு கேட்கும் பணியை தி.மு.கவினர் துவங்கியுள்ளனர்.

பறிக்கப்பட்ட சலுகைகளை வழங்கக் கோரி கடந்த சில நாட்களுக்கு முன் உண்ணாவிரதம் நடத்திய ஜாக்டோ- ஜியோ நிர்வாகிகளிடம் முதல் கட்டமாக வாக்கு சேகரிக்கும் பணி துவக்கப்பட்டுள்ளது. இதை உறுதிப்படுத்தும் வகையில் ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகளின் மொபைல்களுக்கு தி.மு.கவுக்கு வாக்களிக்க கோரி எஸ்.எம்.எஸ் அனுப்பப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இதன் மூலம் அ.தி.மு.க மீது அதிருப்தியில் உள்ள அரசு ஊழியர்களை தங்கள் பக்கம் இழுக்கும் முயற்சியில் தி.மு.கவினர் ஈடுபட்டுள்ளனர். (து)

## இந்திய வலம்

# சுஷ்மிதாசென் நடித்த படத்துக்குத் தடை?

(புதுடெல்லி)

கடந்த 11ஆம் திகதி வெளியான முன்னாள் உலக அழகி சுஷ்மிதாசென், பாஞ்சாலியாக நடித்துள்ள சிங்காரி என்ற இந்தியப் படத்தைத் தடை செய்யக் கோரி உத்தரப் பிரதேச மாநிலம் கோரக்பூரைச் சேர்ந்த ஒரு அமைப்பு சுப்ரீம் கோர்ட்டில் பொது நலன் மனுத் தாக்கல் செய்துள்ளது.

சிங்காரி படத்தில் பாஞ்சாலி கதாபாத்திரம் விபசாரியாக காட்டப்படுவதாகவும், ஒரு இந்துசாமியார் விபசார விடுதிக்கு சென்று ஆபாசமாக பேசி விபசாரியை கற்பழிப்பதாக காட்டப்படுவதாகவும் காளி பக்தராக இருப்பவர் கொலை, கற்பழிப்பு குற்றங்களில் ஈடுபடுவது போல் காட்டப்படுவதாகவும் அம்மனுவில் கூறப்பட்டு உள்ளது. எனவே இந்து மதத்தை புண்படுத்தும் வகையில் உள்ள இப்படத்தை திரையிட தடை விதிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (து)

# புரளி கிளப்பிய மாணவன் கைது

தனது காதலி வெளிநாடு செல்வதை விரும்பாத காதலன், அவள் பயணம் செய்யவிருந்த விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகப் புரளியைக் கிளப்பியதால் விமானப் பயணம் 2 மணி நேரம் தாமதமானது.

மும்பையில் பாடசாலை மாணவிகள் இத்தாலி நாட்டில் நடைபெறும் கருத்தரங்கொன்றில் கலந்துகொள்ளவிருந்தனர். அம் மாணவிகள் குழுவில் தனது காதலியான மாணவி கலந்துகொள்ள விரும்பாத காதலனான மாணவனே வெடி குண்டுப் புரளியைக் கிளப்பியவனாவான்.

சம்பவ தினத்தன்று அம் மாணவன் மூன்று முறை தொலைபேசி மூலம் புரளி கிளப்பியதையடுத்து மாணவிகள் மூலம் அம்மாணவன் அடையாளம் காணப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டான். (து)

# இராணுவத்திற்கும் துணைக்குழுக்களுக்கும் தொடர்பில்லை - இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

**அரச படைகளுக்கும் துணைப்படைகளுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை. இனி தொடர்புகளை ஏற்படுத்தப்போவதும் இல்லை. அத்துடன் இராணுவத்தின் கீழ் எந்தவொரு துணைப் படையோ அல்லது ஒட்டுப்படையோ செயற்படவில்லை. இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் உள்ள ஊடகமொன்றுக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

தீவுச் சேனையில் கருணா குழுவினரது முகாம் இருப்பதாகவும் அங்குள்ள குழுவினருக்கு இராணுவமே பூரண பாதுகாப்பு வழங்கிவருவதாகவும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டினைத் தான் முழுமையாக மறுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தீவுச் சேனையில் கருணா குழுவினர் முகாமிட்டிருப்பதாகவும் ஆயுதப் பயிற்சிகளில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் விடுதலைப்புலிகள் தெரிவிக்கும் கருத்துகள் முழுச் சோடிப்புக் கதைகளே தவிர அதில் எந்தவிதமான உண்மையும் இல்லை.

தீவுச்சேனை எமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசமாகும். அங்கு இராணுவத்தினரைத் தவிர வேறு எந்தவிதமான ஆயுதக் குழுக்களும் இல்லை. எந்தவிதமான துணைப்படையினருடனும் நாம் தொடர்புகளை பேணி வரவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பட்டு வரும் ஆன்மீக நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு நல்லை ஆதீன ஓதுவார் இ.தில்லைமணியின் பண்ணிசை நிகழ்ச்சி இடம்பெறும். (க-35)

# ஜெனீவாப் பேச்சுக் குறித்து பேரியல் அஷ்ரப் விளக்கம்!

முஸ்லிம் அமைப்புகளின் கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு அமைய ஜெனீவா பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்கள் தொடர்பாக பேசப்பட்ட விடயங்கள் குறித்து அமைச்சர் பேரியல் அஷ்ரப் விளக்கமொன்றை அளிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அவர் இந்த விளக்கத்தை அளிப்பார் என்று முஸ்லிம் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பிற்கு முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகளும், கட்சி பேதமின்றி முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க-9)

# விவசாயிகளுக்கு பங்கீட்டு அட்டை

விவசாயிகள் அனைவரும் உர மானியத்தைப் பெற்றுக்கொள்ள வகை செய்யும் விதத்தில் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து பங்கீட்டு அட்டை முறை அறிமுகம் செய்யப்படுமென்று அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனா தெரிவித்தார்.

5 ஏக்கருக்கும் குறைவான விவசாயக் காணியைக் கொண்ட கமக்காரர்கள் அனைவரும் இந்த பங்கீட்டு அட்டையைப் பெறுவதற்கு தகுதியுடையவர்களாவர்.

பங்கீட்டு அட்டையை கூட்டுறவுச் சங்கத்துக்கோ அல்லது தனியார் வியாபாரிக்கோ சமர்ப்பிப்பதன் மூலம் 50 கிலோ உரம் கொண்ட பொதியை 350 ரூபாவுக்கு விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-7)

# சிவராம் கொலைச் சந்தேக நபரின் விளக்க மறியல் நீடிப்பு!

(கொழும்பு)

ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரை மார்ச் மாதம் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அவிசாவளை மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாமனிதர் சிவராம் படுகொலை சம்பந்தமான முறைப்பாட்டினை விசாரணைக்கு எடுத்த வேளை சட்டமா அதிபரின் எதிர்ப்பைக் கருத்தில் எடுத்த நீதிபதி நிஹால் சில்வா சந்தேக நபருக்கு பிணை வழங்க மறுப்புத் தெரிவித்து விளக்கமறியலை நீடித்தார்.

2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி ஊடகவியலாளர் சிவராம் பம்பலப்பிட்டியில் வைத்து கடத்திக் கொலை செய்யப்பட்டு மறுதினம் காலை நாடாளுமன்ற வீதியில் சடலமாக அவர் மீட்கப்பட்டார்.

பின்னர் குற்றத்தடுப்பு பொலிஸாரினால் சிறீஸ்கந்தராஜா என்பவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு கடுவெல நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பொலிஸார் மேற்கொண்டுள்ள முறைப்பாட்டிற்கமைய கடுவெல நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட அடையாள அணிவகுப்பின் போது சாட்சியாளர்களினால் சந்தேக நபர் அடையாளம் காணப்படவில்லையெனத் தெரிவித்து சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் 9 மாத காலமாக இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதால் தகுந்த பிணையில் அவரை விடுதலை செய்யுமாறு கேட்டுள்ளனர்.

மாமனிதர் சிவராமின் கொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கைப்பற்றப்பட்டுள்ள ரிவோல்வர் பற்றிய ஆய்வறிக்கை இது வரை கிடைக்கவில்லையென்றும் விசாரணை நடவடிக்கைகள் முடிவடையவில்லையென்றும் அதனால் சந்தேக நபருக்கு பிணை வழங்குவதனை எதிர்ப்பதாகவும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

இதனையடுத்து சந்தேக நபரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (க)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின் சுயசரிதை

65 மீள்பார்வை



"சத்ரபதி சிவாஜி" படப்பிடிப்பில் தஞ்சைவாணன், சிவாஜி,டாக்டர் டி.எஸ். நாராயணஸ்வாமி

டி.எஸ்.என்: 1974 ஆண்டு ஜூலை மாதம் மஹாராஷ்டிராவில் சிவாஜி மகாராஜா சிம்மாசனம் ஏறிய 300வது டெர்ஸென்டினரி விழாவைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். மன்னர் சிவாஜியின் வரலாற்றின் ஒரு பகுதியை ஒரு சிறு படமாக எடுத்து தொலைக்காட்சியில் ஒளிபரப்ப விரும்பினோம். அந்தப் படத்தில் நீங்கள் தான் சிவாஜியாக நடிக்க வேண்டும் என்று முடிவு செய்தோம். மஹாராஷ்டிரத்தில் இருந்த ஒரு சில கலைஞர்களும் அதையே விரும்பினார்கள். படத்தைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்று, நான் சென்னைக்கு வந்து, தங்களைச் சந்தித்த போது சிவாஜியாக நடிப்பதோடு மட்டுமன்றி படம் முழுவதையும் எடுக்கும் மொத்தச் செலவையும் தாங்களே ஏற்றுக்கொள்வதாகக் கூறி, எங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினீர்கள். ஏ.வி.எம். அவர்கள் தனது ஸ்டூடியோவில் படப்பிடிப்பிற்காக தன் செலவில் செற் போட்டுக்கொடுத்தார்கள். நான் உருவாக்கிய கதைக்கு கவிஞன் தஞ்சைவாணன் அவர்கள் வசனம் எழுதினார்கள். உங்களுடனிருந்த கண்ணன் மற்றும் தங்களின் சிவாஜி பிலிம்ஸ் டெக்னிஷியன்கள் ஒத்துழைப்பில் அந்தப் படத்தை எடுத்தோம்.

சிவாஜி: ஆம்... நன்றாக நினைவிருக்கிறது.

"அதோ ஆட்சிப்பீடம் தெரிகிறது. இதோ அதன் முதல்படி... படியல்ல இது... என் அன்னையின் மடி" என்று கூறி சிவாஜி மகாராஜா சிம்மாசனம் ஏறும் காட்சியை நீங்கள் படமாக்கினீர்கள்.

அண்ணா எழுதிய சிவாஜி நாடகத்தில் சிவாஜி மகாராஜா சிம்மாசனம் ஏறுவதற்கு முன் ஏற்பட்ட தடைகளைக் காட்டியிருந்தார். உங்கள் படத்தில் அந்தத் தடையை மீறி, சிம்மாசனம் ஏறும் போது, சத்ரபதி சிவாஜி யார் யாருக்கு நன்றி சொன்னார் என்று காட்டினீர்கள். இந்தப்படம் பம்பாய் தொலைக்காட்சி மூலம் தமிழிலேயே ஒளிபரப்பப்பட்டதல்லவா?



அசோக்குமார் -பிரதீப் குமார்-மஹ்மூத் -லலிதா பவர் ஆகியோர்களுடன்....

டி.எஸ்.என்: உண்மை தான்... சிவாஜியைப் பற்றி ஆராய்ச்சி செய்த பாபா சாகேப் புரந்தரே என்பவர் மராட்டியில் படத்திற்கு ஒரு முன்னுரை தந்தார். அதன் பின் தமிழில் நீங்கள் நடித்துத் தந்த படம் 1974 ஜூலை 21ஆம் திகதி பம்பாய் தொலைக் காட்சி மூலம் ஒளிபரப்பப்பட்டது. இதற்குப் பின் டில்லியிலும், கல்கத்தாவிலும் சென்னைத் தொலைக்காட்சி ஆரம்பித்த பின், 1975 ஆகஸ்ட் 15இல் சென்னையிலும் ஒளிபரப்பப்பட்டது. இந்தப் படத்திற்கான மொத்தச் செலவையும் தாங்களே ஏற்றுக்கொண்டு இதனை உருவாக்கித் தந்தது, "சத்ரபதி சிவாஜி"யிடம் தாங்கள் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தீர்கள் என்பதை எடுத்துக்காட்டியது.

சிவாஜி: எனக்கு உயர்ந்த புகழைக்கொடுத்தது. "சிவாஜி" என்ற பெயர் தான் அதை நான் எப்போதும் மறந்ததில்லை. அவருக்காகவும் நாட்டுக்காகவும் இதைச் செய்தேன். ஒரு முறை மஹாராஷ்டிரத்திலுள்ள கொய்னா டேம் உடைந்து விட்டது. ஒய்.பி.சவான் அவர்கள் அப்போது மஹாராஷ்டிரத்தின் முதல் மந்திரியாக இருந்தார். அப்போது எல்லோரும் பணம் கொடுத்து உதவி செய்யுங்கள் என்றார். நான் ஒரேயொரு ஆள் தான், ரூபாய் பதினொரு இலட்சத்தை நன்கொடையாக அனுப்பினேன்



தேவானந்த் ,கல்பனா கார்த்திக் , சுனில்தத்துடன்...

அது மட்டுமில்லை. பம்பாயில் சிவாஜி திடலில் இருக்கிற, பெரிய சிவாஜி சிலையை அமைக்க, முக்கால் வாசி பணம் கொடுத்தது நான் தான். பம்பாயில் உள்ள பல சிவாஜி சிலைகள் அமைத்து நான் பொருள் உதவி செய்திருக்கிறேன். அங்கே அதிகம் பேர் என்னை மராட்டியக்காரர் என்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சிவசேனா கூட என்னை மராட்டியக்காரன் என்று தான் நினைத்துக் கொண்டிருந்தார்கள். அங்கே சிலர் என்னை "சிவாஜி ராவ்" என்று தான் கூப்பிடுவார்கள். மஹாராஷ்டிரத்தின் மீது எனக்கு ஒரு தனி பற்று உண்டு. அங்கே தான் என் உடன்பிறவா சகோதரி இருக்கிறார். அவர் தான் இசை உலகின் பொக்கிஷமான லதா மங்கேஷ்கர் அவர்கள். என்னிடம் அன்பும், மரியாதையும் அவர்களுக்கு உண்டு. அவர் தான் எங்கள் குடும்பத்தில் ஒருவர்.

இந்தித் திரைப்பட உலகில் இருந்த , பிருத் விராஜ்கபூர், ராஜ்கபூர், அசோக்குமார், திலீப் குமார், சஞ்சீவ்குமார் போன்ற பல நடிகர்களும், அப்போது பிரபலமாக இருந்த நடிகைகளும் என்னிடம் மிகவும் அன்பு காட்டியவர்கள். என் நடிப்பையும் பாராட்டியவர்கள்.



பிரித்விராஜ் கபூருடன்...

ஹிந்தி திரைப்படக் கலைஞர்களுடன்...



திலீப் குமாருடன்...

### தான தர்மங்கள்

டி.எஸ்.என்: கொய்னா டேம் நன்கொடை பற்றிக் குறிப்பிட்டீர்கள். இதேபோல தேச நலனுக்காக உதவி செய்த வேறு சம்பவங்களை நினைவுகூற முடியுமா?

சிவாஜி: பொதுவாக இதுபோன்ற தர்ம காரியங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளக்கூடாது. இருந்தாலும் நீங்கள் கேட்பதால், ஓரிரு சம்பவங்களை மட்டும் சொல்கிறேன். ஒரு முறை பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் தமிழ் நாட்டுக்கு வந்திருந்தார். அந்த நேரத்தில் என் மகளுடைய திருமணம் நடக்கவிருந்தது. எங்களுடைய பரம்பரையில் திருமணத்திற்கு நகை செய்தால் , அதைத் தாயார் போட்ட பிறகு தான் மகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பது சம்பிரதாயம் .அதனால் அப்போது, என் மனைவி ஏராளமான நகைகளை அணிந்திருந்தாள். (தொடரும்)



## தவக்கால சிந்தனை

### "ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டவர் பேறு பெற்றவர்"

வாழ்வா? சாவா? நன்மையா - தீமையா? சரியானவற்றை தேர்ந்து கொள்வதில்தானே மனித ஆளுமையின் முதிர்ச்சி வெளிப்படுகின்றது. சாவை தேர்ந்து கொள்பவன் அதனை அடைவதற்கு தீவிர முயற்சி செய்யத் தேவையில்லை. காட்டாற்று வெள்ளத்தின் திசையிலே செல்வதற்கு முயற்சிகள் தேவையில்லையன்றோ! ஆனால் வாழ்வைத் தேர்ந்து கொள்பவன் தொடர்ந்து இறுதிவரை போராட அழைக்கப்படுகிறான். அது வெள்ளத்தின் போக்கிற்கு எதிரான திசை நோக்கிய எதிர் நீச்சல் ! உலகின் போக்குகளுக்கு எதிராக கடவுளின் அனபை உயரினும் மேலாகக் கருதி அவரது வழியில் தொடர்ந்து செல்லும் தீவிர திருப்பயணம் அது ! வாழ்வின் ஊற்றாம் இயேசு விடுக்கும் அழைப்பு இதுவே. தன்னல வேர்களை அறுக்கவும், சிலுவையை அன்புடன் ஏற்கவும் வேண்டும் எனும் அழைப்பு இது. வாழ்வது என்பது வழங்குவது! காப்பது என்பது இழப்பதுவே! இதனைப் புரிந்து கொள்ளும் இதயங்கள் பேறுபெற்றவையே!

காவலன்

## முத்தலிப் கொலை வழக்கின் சந்தேக நபர் வாக்குமூலம் அளிக்க அனுமதி

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரி லெப் . கேணல் முத்தலிப் கொலை வழக்கின் சந்தேக நபர் வாக்குமூலம் அளிக்க கொழும்பு நீதிபதி ஜிகன் பிலப்பிட்டிய அனுமதியளித்துள்ளார்.

முத்தலிப் வழக்கின் சந்தேக நபரான ஏ.கே.கருணாரட்ண என்றழைக்கப்படும் அனுரா தேசப்பிரிய தான் நீதிபதியிடம் வாக்குமூலம் அளிக்க விரும்புவதாக தனது சட்டத்தரணி தெஜித கொரலஹ மூலம் நீதிமன்றிற்குத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பான மனுவை கடந்த திங்கட்கிழமை நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. சந்தேக நபரை சிறையிலிருந்து நீதிமன்றத்துக்கு கடும் பாதுகாப்புகளுடன் எதிர்வரும் மார்ச் மாதம் 13ஆம் திகதி முன்னிலைப்படுத்த வேண்டும் என சிறைத்துறை அதிகாரிகளுக்கு நீதிபதி ஜிகன் பிலப்பிட்டிய உத்தரவிட்டார்.

இதேவேளை முத்தலிப் வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களான அனுரா தேசப்பிரிய, கோப்பாயைச் சேர்ந்த செந்தில்குமார் என்ற ராஜன், இராஜரத்தினம் சரஸ்வதி என்ற உமா ஆகியோர் பாதுகாப்புக் காரணங்களுக்காக நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட வில்லை.

வழக்கை விசாரித்த நீதிபதி ஜிகன் பிலப்பிட்டிய சந்தேக நபர்கள் அனைவரினதும் விளக்கமறியலை மார்ச் 13ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டார். (க)

## உடன்படிக்கையில் திருத்தம் செய்யப்பட்டால் பொதுமக்களுக்கு உடன் அறிவிக்க வேண்டும்!

## ஐ.தே.க கோரிக்கை

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுவர்த்தையின் போது யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ஏதேனும் திருத்தம் செய்யப்பட்டிருந்தால் அது குறித்து அரசாங்கம் பொது மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

அத்துடன் சர்வதேச சமூகத்துக்கும் இது குறித்து அறிவிக்க வேண்டும் என கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை தொடர்பாக ஒழிவு மறைவின்றி பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தப்படும் எனக் கூறிவரும் அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் என்ன திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது என்பதையும் தெளிவு படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (க-4)

## ஆசிரியர்களின் பிரச்சினை குறித்து ஆராய 6ஆம் திகதி மாநாடு!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கு எதிர்வரும் 6ஆம் திகதி உயர் மட்ட மாநாடு ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டினை சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார். இது குறித்து மேற்படி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நீண்டகாலமாக தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றி வருபவர்களது நிரந்தர நியமனங்கள் தொடர்பான பிரச்சினை சரிவர கையாளப்படவில்லை என்ற முறைப்பாடுகள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சுக்கு கடிதங்கள் மூலமும் தொலைபேசி மூலமும் தொடர்ந்து கிடைத்து வருவதுடன் கடந்த வாரமும் நேற்று முன்தினமும் 400ற்கும் அதிகமான தொண்டர் ஆசிரியர்கள் அமைச்சரை நேரடியாக சந்தித்தும் தமது குறைபாடுகளை முன்வைத்துள்ளனர்.

இதன் பிரகாரம் உடனடியாக கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும் 6ஆம் திகதி வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் உட்பட அதிகாரிகளைக் கொண்ட உயர் மட்ட கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளார். இதன் போது வடக்கு- கிழக்கில் இருந்து தொண்டர் ஆசிரியர்களை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் மாவட்டம் ஒன்றுக்கு 5 பிரதிநிதிகள் வீதம் அழைக்கப்படுவார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-9)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் 2006ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப.2.30மணிக்கு சென்ஜேம்ஸ் தேவாலய மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண இலங்கை வங்கி மேற்றரக் கிளை முகாமையாளர் என் .சிவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி நளினி சிவரத்தினம் பரிசில்களை வழங்குவார். (து-132,133)

# ஈராக்கில் ஷியா-சன்னி முஸ்லிம்கள் மோதல்
## 68க்கும் அதிகமானோர் பலி

ஈராக்கில் ஷியா-சன்னி என்ற இரு பிரிவு முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இவர்கள் இடையே காலம் காலமாகவே மோதல் போக்கு நிலவுகிறது.

சதாம் சன்னி பிரிவைச் சேர்ந்தவர் அவர். ஆட்சிக்காலத்தில ஷியா முஸ்லிம்களை அடக்கி ஒடுக்கி வந்தார். அவர் வீழ்ந்ததும் ஷியா முஸ்லிம்கள் கை ஓங்கியது. அதில் இருந்து இரு தரப்பினருக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருகிறது.

இதற்கிடையே சமாரா என்ற இடத்தில் கடந்த 22ஆம் திகதி ஷியா முஸ்லிம்களின் தர்ஹா ஒன்று குண்டுவைத்து தகர்க்கப்பட்டது. இதனால் இரு தரப்புக்கும் இடையே மீண்டும் மோதல் வெடித்தது. இதனால் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது. கடந்த திங்கட்கிழமை ஊரடங்கு விலக்கிக் கொள்ளப்பட்டது.

இதனால் மீண்டும் கலவரம் வெடித்தது. நாடு முழுவதும் பல இடங்களில் மோதிக் கொண்டனர். கொறையா என்ற இடத்தில் ஷியா முஸ்லிம்கள் கூடி நின்ற இடத்தில் கார் குண்டு மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 23பேர் கொல்லப்பட்டனர். 55 பேர் படுகாயம் அடைந்தனர். அதேபோல பக்தாத்தில் மண்ணெண்ணை வாங்குவதற்காக கியூவில் நின்ற மக்கள் மீது மனித வெடிகுண்டு தீவிரவாதி தாக்குதல் நடத்தியதில் 23பேர் கொல்லப்பட்டனர்.

தெற்கு பக்தாத் நகரில் 9 சன்னி முஸ்லிம்கள் எரித்து கொல்லப்பட்டு கிடந்தனர். காசிமியா என்ற இடத்தில் ஷியா முஸ்லிம்கள் தர்ஹா ஒன்றை வெடிகுண்டு வீசி தகர்த்தனர். இதில் ஒருவர் கொல்லப்பட்டார்.


சதாம் உசேனின் சொந்த ஊரான திக்ரித்தில் சன்னி முஸ்லிம் மசூதி தகர்க்கப்பட்டது. சதாம் உசேனின் தந்தை கல்லறையையும் தகர்த்தனர். மான்கர் மாவட்டத்தில் காரில் வந்த மர்ம மனிதர்கள் சன்னி மசூதியை நோக்கி சுட்டனர். இதில் 3 பேர் உயிரிழந்தனர்.

பக்தாத்தில் ஷியா முஸ்லிம் குரு ஒருவர் கை, கண்கள் கட்டப்பட்ட நிலையில் கொடூரமாக கொலை செய்யப்பட்டு கிடந்தார். அதே பகுதியில் குண்டுவெடிப்பில் 6 பேர் கொல்லப்பட்டனர். நேற்று முன்தினம் இடம்பெற்ற கலவரத்தில் மட்டும் 68பேர் பலியாகி இருக்கிறார்கள். வன்முறை சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

சன்னி-ஷியா முஸ்லிம்கள் மோதலால் இது வரை 379பேர் கொல்லப்பட்டு இருப்பதாக அரசு தரப்பில் கூறப்படுகிறது. ஆனால் அமெரிக்காவில் இருந்து வெளிவரும் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை இதுவரை ஆயிரத்து 300க்கும் மேற்பட்டோர் பலியாகி இருப்பதாகக்கூறி இருக்கிறது.

ஈராக் போர் தொடங்கியதற்கு பிறகு அமெரிக்க இராணுவ வீரர்கள் 2ஆயிரத்து 292பேர் பலியாகி இருப்பதாக இராணுவ தரப்பு தகவல் தெரிவிக்கின்றது. (க)

WORLD NEWS உலக தரிசனம்



இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவில் சுரங்க தொழிற்சாலை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட போது பொலிஸாருடன் மோதல் ஏற்பட்டபோது...

# காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பல்வேறு தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்பு

(வாஷிங்டன்)

காஷ்மீரில் இருந்து செயல்படும் தீவிரவாதிகளுக்கு அல்-கெய்தா தலிபான் மற்றும் பாக்.தீவிரவாதிகளுடன் தொடர்பு உள்ளதாகவும் இது மிகவும் ஆபத்தான கூட்டு எனவும் பாகிஸ்தான்அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.

யு.எஸ்.அதிபர் புஷ்ஷின் பாகிஸ்தான் வருகையை முன்னிட்டு அமெரிக்க தொலைக் காட்சிஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். பயங்கரவாத இயக்கங்களின் தலைவர்களில் பலர் பாகிஸ்தான் நாட்டு அரசின் உதவியுடன் பிடிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (க)



சிட்னி நகரில் உள்ள பூங்கா ஒன்றில் மிகப்பெரிய கழுகு ஒன்று பறந்து வந்தபோது அங்குள்ள ஊழியர் பதுங்கு வதைப் படத்தில் காணலாம்...

### முதலையின் பிடியில் இருந்து
# நண்பரை காப்பாற்றிய மூதாட்டிக்கு வீரதீர விருது

(சிட்னி)

தனது நண்பரை மிகப்பெரிய முதலையிடம் இருந்து காப்பாற்றிய 61வயது ஆஸ்திரேலியப் பெண்மணிக்கு வீரதீர விருது கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

அந்த பெண்மணியின் பெயர் அலிசியா சோரோஹான். வடக்கு கேப் யார்க்கில் 2004ஆம் ஆண்டு ஒக்ரோபர் 11ஆம் திகதி முகாம் ஒன்றில் தங்கியிருந்த போது அதிகாலையில் திடீரென அலறல் குரல் கேட்டு திடுக்கிட்டு விழித்தார் அலிசியா. தான் தங்கியிருந்த இடத்துக்கு அருகே கூடாரத்தில் தங்கியிருந்த நண்பர் ஆன்ட்ரூ கொரின் குரல்தான் அது என்பதை சற்று நேரத்தில் உணர்ந்துகொண்டார்.

அருகில் உள்ள ஏரியில் இருந்து வந்த 4.2 மீற்றர் நீளமும் 300கிலோ எடையும் கொண்ட மிகப் பெரிய முதலையின் வாயில் நண்பர் கொர் சிக்கிக்கொண்டிருந்ததை அறிந்து மின்னலென செயல்பட்டார்.

முதலையின் முதுகின் மீது பாய்ந்து அமர்ந்தார். உடனே முதலை தனது முகத்தைத் திருப்பியது. அலிசியாவின் மூக்கைக் கடித்தது. அத்துடன் அவரது கையையும் ஏறக்குறைய துண்டித்தது. இதற்குள் அலிசியாவின் மகன் முதலையைத் துப்பாக்கியால் சுட்டுவீழ்த்தினார். அலிசியாவின் நண்பர் காப்பாற்றப்பட்டார். (க)

# பாகிஸ்தானுக்குள் தலிபான் தீவிரவாதிகள் ஊடுருவுவதை தடுக்க எல்லையில் வேலி!

(வாஷிங்டன்)

அல்கெய்தா தீவிரவாதிகளை வேட்டையாடுவதிலும் சர்வதேச பயங்கரவாதி பின்லேடனை பிடிப்பதிலும், தலீபான்களை வேட்டையாடுவதிலும், பாகிஸ்தான் போதுமான அளவுக்கு வேகம்காட்டவில்லை என்ற விமர்சனம் அமெரிக்காவில் எழுந்துள்ளது. இதற்கு பதில் அளிக்கும் வகையில் முஷாரப் பதில் அளித்திருக்கிறார்.

இது தொடர்பாக ஊடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் அவர் கூறிஇருப்பதாவது,

நான் அல்கெய்தா மற்றும் தலீபான் தீவிரவாதிகளை வேட்டையாடுவதில் வேகம் காட்டவில்லை என்று கூறுவது தவறு. அது தவறான எண்ணத்தின் அடிப்படையில் எழுந்த கருத்து ஆகும் பின்லேடனைப் பிடிப்பதில் மட்டும் எங்கள் இராணுவம் ஈடுபடவில்லை. அல்கெய்தா தலீபான் தீவிரவாதிகளைப் பிடிப்பதிலும் இராணுவத்தை நாங்கள் பயன்படுத்தி வருகிறோம்.

தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிக்கும் முகாம்களை மூடுவதற்காக 80ஆயிரம் இராணுவ வீரர்கள் செயல்பட்டு வருகிறார்கள். இந்தப்பணியில் நாங்கள் 400வீரர்களை இழந்து இருக்கிறோம்.

தலீபான் தீவிர்வாதிகள் பாகிஸ்தானுக்குள் ஊடுருவுவதை தடுப்பதற்காக பாகிஸ்தான் எல்லையில் பாதுகாப்பு வேலி அமைக்கப்படும். இதை ஆப்கானிஸ் தான் ஜனாதிபதி கர்சாய் மற்றும் ஜனாதிபதி புஷ் ஆகியோரிடம் வலியுறுத்தி வருகிறேன் என்றார். (க)

# 2050இல் சீனாவை மிஞ்சிவிடும் இந்திய மக்கள் தொகை

(வாஷிங்டன்)

உலகில் அதிகமக்கள் தொகை கொண்ட நாடு சீனா இதற்கு அடுத்த இடத்தில் இந்தியா உள்ளது. இந்நிலையில் 2050ஆம் ஆண்டுக்குள் சீனாவின் மக்கள் தொகையை இந்தியா மிஞ்சிவிடும் என்று அமெரிக்காவின் மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை நடத்திய கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.

அதன்படி இந்தியாவின் மக்கள் தொகை 2050க்குள் 160 கோடியாகவும் சீனாவின் மக்கள் தொகை 140 கோடியாகவும் இருக்கும். ஜுன் 1.1999இல் உலக மக்கள் தொகை 600கோடியாக இருந்தது. தற்போது உலகின் மக்கள் தொகை 650 கோடி தற்போதைய விகிதாசாரப்படி மக்கள் தொகை பெருகுமானால் 2013க்குள் உலகின் மக்கள் தொகை 700கோடியைத் தாண்டும்.

2050க்குள் 920கோடியை எட்டும். ஜப்பானில் முதல்முதலாக கடந்த ஆண்டு பிறப்பு விகிதம் குறைந்துள்ளது. 2050க்குள் ஜப்பானின் மக்கள் தொகை 10 கோடிக்குள்தான் இருக்கும். (து)



அமெரிக்காவில் சால்ட்லேக் சிட்டியில் தனியார் விமான கம்பனி விமானிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டபோது....

# சதாமின் தந்தை சமாதி மீது வெடிகுண்டுவீசி தாக்குதல்

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன் தந்தையின் சமாதி மீது வெடிகுண்டு வீசப்பட்டது. ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன் அமெரிக்கப் படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் ஈராக்கிலுள்ள சதாமின் சொந்த ஊரான திக்ரித்தில் அவரின் தந்தையின் சமாதி மீது வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டதாக நேற்று முன்தினம் செய்திகள் வெளியாகின ஆனால் ஈராக் பொலிஸார் இதனை உறுதிப்படுத்தவில்லை.

ஈராக்கில் கடந்த வாரம் ஷியா பிரிவு முஸ்லிம்களுக்குச் சொந்தமான பழம் பெரும் மசூதி ஒன்று வெடிகுண்டு மூலம் தகர்க்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து ஷியா மற்றும் சன்னிபிரிவு முஸ்லிம் மக்களிடையே கலவரம் ஏற்பட்டது. இதில் 200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

கலவரத்தின் ஒரு பகுதியாக சதாமின் தந்தையின் சமாதி மீது தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (க)



தந்தையின் சமாதி மீது தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (க)

> தவறைத் திருத்திக் கொள்ளாமல் அதை ஒப்புக் கொள்வது, ஓட்டையை அடைக்காமல் கப்பலில் ஏறும் நீரை இறைப்பதாகும்.
> -அப்துற்-றஹீம்

வலம்புரி

## இயல்பு வாழ்வை ஏற்படுத்த படையினரின் ஒத்துழைப்புத் தேவை

யாழ்.குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக, மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் றோகித பிரியதர்ஷன தலைமையில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று நேற்று முன்தினம் யாழ்.படைத்தளபதியுடன் சந்திப்பை மேற்கொண்டது.

காங்கேசன் துறைப் படைத்தளத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில்,

- கடற்றொழிலாளர்களின் பிரச்சினை
- தீவகத்தில் பயணிகள் மீது கடற்படையினர் நடத்தும் கடுமையான சோதனை
- மக்கள் நடமாடும் பகுதிகளில் வீதியெங்கும் ஆயுதம் ஏந்திய வண்ணம் காத்திருக்கும் படையினரின் விடயம்.
- படையினரால் புதிதாக அமைக்கப்பட்டு வரும் முட்கம்பி வேலிகள்

உட்பட பல்வேறு பிரச்சினைகள் இச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

இதில் கடற்றொழிலாளர்களை தொழில் செய்வதற்கு அனுமதிக்கும் விடயமும் வீதியோரங்களில் ஆயுதங்களுடன் காத்திருக்கும் படையினரின் விடயமும் முக்கிய இடத்தைப் பெற்றன.

யாழ்.குடாநாட்டு மீனவர்கள் தொழில் செய்வதற்குப் படையினரால் விதிக்கப்பட்டுள்ள தடையினால் மீனவர்கள் தமது அன்றாட வாழ்வியலுக்காக பெரும்பாடுபட வேண்டியதாயுள்ளது.

தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக கடலில் தொழில் செய்யும் உரிமையை மறுப்பது இன ஒற்றுமைக்கு உகந்ததல்ல.

யாழ்.குடாநாட்டிலுள்ள மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு படைத்தரப்பினரால் விதிக்கப்பட்டுள்ள தடையை சிங்கள மீனவர்களுக்கு விதிக்க முடியுமா?

அவ்வாறு சிங்கள மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு படையினர் தடைவிதித்தால் நிகழக்கூடிய விளைவு எவ்வாறு இருக்குமென்பதை ஊகித்துக் கொள்ள முடியுமல்லவா?

அப்படியானால் யாழ்.குடாநாட்டில் கடற்றொழிலாளர்களுக்கு விதிக்கப்படும் தடைக்கு தமிழர்கள் என்பது மட்டுமே காரணமாகவிருக்க முடியும்.

படையினரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய இனரீதியான ஒடுக்குமுறைகள் நாட்டில் சமாதானம் ஏற்படுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டாது.

எனவே இலங்கை மண்ணில் சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் முதலில்படையினரின் பூரண ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

எத்தனை பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் படையினரின் ஒத்துழைப்பு கிடைக்காத போது அதனால் எதுவித பயனும் ஏற்பட மாட்டாது என்பது உறுதி.

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிரான மனு மீதான விசாரணை மார்ச்-29இல்

(கொழும்பு)

யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுக்கள் மீதான விசாரணைகள் மீண்டும் இம் மாதம் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் சட்டவிரோதமானது எனவும் இதனை இரத்துச் செய்யுமாறு உத்தரவிட வேண்டும் எனக் கோரியுமே இந்த மனுவினை இரண்டு கட்சிகளும் 2002ஆம் ஆண்டுதாக்கல் செய்திருந்தன.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவையில் அங்கம் வகித்திருந்த அமைச்சர்கள் ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சர்களை மனுவில் பிரதிவாதிகள் பட்டியலில் இணைத்துக்கொள்வதற்கு நேற்று முன்தினம் அனுமதி வழங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றம் இது தொடர்பான விசாரணைகளை மார்ச் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. (கு)

# சுவீடனுக்கு க.கா.குழுத் தலைமைப் பதவி பலன் எதுவும் இல்லை என்கிறது உறுமய

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தவிர ஏனைய ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களை களைவதற்கு ஜெனீவாவில் அரசாங்கம் இணங்கியமையானது மாபெரும் தவறு என ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் பாட்லிய சம்பக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதனால் நாட்டின் பாதுகாப்பு மீண்டும் வீழ்ச்சியடைவதாகவும் கிழக்கில் விடுதலைப்புலிகளுக்கு மீண்டும் தங்களின் அதிகாரத்தினை பரவச்செய்ய இலகுமாக இருக்கும் என்றும் ரணவக்க கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பாட்லிய இவ்வாறு குறிப்பிட்டார். ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையானது மகிந்த சிந்தனைகளுக்கு முரணானது.

இந்த இணக்கப்பாட்டிற்கு அமைய அரசாங்கம் செயற்பட்டால் எதிர்வரும் காலத்தில் அதற்கு எதிராக செயற்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுவீடன் நாட்டிற்கு கண்காணிப்புக்குழுவின் தலைமை வழங்கப்பட்டதில் எவ்வித வெற்றியும் கிடையாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ச-4)

# நிர்வாகிகள் தெரிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் 15வது வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த மாதம் 25ஆம் திகதி தென்மராட்சிப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நலன்புரி சங்கத் தலைவர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு இடம் பெற்றது.

தலைவராக பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசனும் , செலாளராக ஏ.ரகுநாதனும் ,உப தலைவராகக.கார்திகேசனும், பொருளாளராக நரேந்திரன் ஆகியோரும் தெரிவாகினர். (க-108)

# வீதிகளில் தேர்தல் சின்னம் வரையத் தடை

உள்ளூராட்சித் தேர்தலுக்கான சின்னங்களையும் இலக்கங்களையும் வீதிகளில் பொறிப்போர் கைது செய்யப் படுவார்கள் என்று தேர்தலுக்குப் பொறுப்பான பொலிஸ் பிரதிமா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

இத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சுவரொட்டிகள் ,கட்அவுட்டுக்களை பொது இடங்களில் பார்வைக்கு வைப்பது தடை செய்யப்பட்டுள்ளதால் தற்போது தெருக்களில் சின்னங்களையும் வேட்பாளர் இலக்கங்களையும் பொறித்து வருவதாகத் தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் இவ்வாறான செயல்களில்ஈடுபடுவோரைக் கைது செய்யுமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பெருந்தெருக்களில் சின்னங்களையும் இலக்கங்களையும் பொறிக்கும் வேட்பாளர்கள் குறித்து பொலிஸார் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் இவ்வாறான நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்குமாறு தத்தமது ஆதரவாளர்களுக்கு அறிவுறுத்துமாறும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வேட்பாளர்களைக் கேட்டுள்ளார்.

அத்துடன் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் கட்சி அலுவலகமாகத் தமது வீட்டை மாத்திரமே பாவிக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டதிட்டத்தின் பிரகாரம் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் அலுவலகங்களைப் பொது இடங்களில் வைத்திருப்பது தடுக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (து)

## வத்திராயனில் நடைபெற்ற சிறுவர் கலைவிழா

(மருதங்கேணி)

சுனாமி அனர்த்தங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சிறுவர்கள் மனத்தாலும் உடல் நலத்தாலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டவர்களாகவுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர் களை அப் பாதிப்பில் இருந்து விடுவிப்பதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்னெடுத்து வரும் செயற்திட்டங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்ட சிறுவர் பொழுது போக்கு நிலையங்களுக்கிடையே கலைத்திறனை வெளிப்படுத்தும் நோக்கோடு கலைவிழா ஒன்று கடந்த சனிக்கிழமை வத்திராயனில் நடைபெற்றது.

இக் கலைவிழா உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் செயலாளர் திருமதி செ. சோமசுந்தரம் தலைமையில் நடை பெற்றது.

இக் கலைவிழாவில் வடமராட்சி கிழக்கில் உள்ள 16 பொழுதுபோக்கு சிறுவர் நிலையங்கள் கலந்து கொண்டன.

இவ்விழாவில் கலைத்திறனை வெளிப்படுத்திய தாளையடி சிறுவர் பொழுதுபோக்கு நிலையம், ஆழியவளை பாடசாலை பொழுதுபோக்கு மையம், செம்பியன்பற்று பொழுது போக்கு நிலையம் ஆகிய மூன்று சிறுவர் பொழுதுபோக்கு நிலையங்களுக்கும் முறையே மூவாயிரம், இரண்டாயிரம், ஆயிரம் ரூபா பணப்பரிசுகள் வழங்கப்பட்டன.பங்குபற்றிய மற்றைய சிறுவர் பொழுதுபோக்கு மையங்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இக் கலைவிழா தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் யுனிசெப் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் நடைபெற்றது. (து-35)

## எண்ணெய் படிமங்கள் அகழ்வு அடுத்த ஆண்டு ஆரம்பமாகும்

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் காணப்படும் எண்ணெய் படிமங்களை அகழ்ந்தெடுக்கும் நடவடிக்கைகள் அடுத்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என்று பெற்றோலிய வள அமைச்சர் ஏ. எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பெற்றோலிய வள ஆராய்ச்சி மற்றும் அகழ்வு தொடர்பான சட்டமூலம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. புத்தளம் மற்றும் பேசாலை கடற்பிராந்தியங்களில் பெற்றோலியப் படிமங்கள் இருப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர், இவற்றை அகழ்ந்தெடுப்பதற்கான உதவிகளை ஈரான் மற்றும் டுபாய் ஆகிய நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படவிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-9)



## சாயி அருளமுதம்

பூஜை, ஜபம், தியானம், பிரதிக்ஞையைக் காப்பாற்றுதல் போன்ற நற்கருமங்கள் ஆகியவை 'படிகள்' நல்ல சிந்தனைகள், கூடிய பகுத்தறிவுக்கான பிரார்த்தனைகள், மற்றவர்களுக்கு உதவிசெய்யும் சந்தர்ப்பம் போன்றவையும் அதற்கு உதவும். மெதுவாகவும், உறுதியாகவும் மனத்தைச் சுத்தப்படுத்துங்கள். புத்தியைக் கூர்மையாக்குங்கள். புலன்களைப் புனிதமாக்குங்கள். அதனால் அனுக்கிரகத்தை வென்றெடுங்கள்.

# ஐ.தே.கவின் ஆதரவாளர்களின் வாக்காளர் அட்டையில் பெயர் நீக்கம்

வாக்காளர் இடாப்புக்களிலிருந்து ஐ.தே. கவிற்கு ஆதரவு தெரிவிக்கும் பொது மக்கள் பலரின் பெயர்கள் அரசாங்கத்தால் நீக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பாக கொழும்பு நகரில் உள்ள 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களின் பெயர்கள் இதுவரை நீக்கப்பட்டிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஐ.தே.கவின் கேம்பிரிஜ் பிளேஸ் காரியாலயத்தில் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்; தொழிநுட்ப காரணங்களை எடுத்துக் காட்டி பலரின் வாக்குரிமைகளை இல்லாது செய்வதற்கு அரசாங்கம் முனைந்து வருகின்றது.

கொழும்பில் வாழும் பெரும்பான்மையானோரின் பெயர்களை வாக்காளர் இடாப்புக்களில் இருந்து நீக்கிவரும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இது தொடர்பாக நாம் மக்களை தெளிவுபடுத்தவுள்ளோம். அரசாங்கத்தின் இவ்வாறான ஜனநாயக விரோத செயல்களை மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டியது ஐ.தே.கவின் கடமையாகும் என்றார். (ச-4,5)

## சிறிலங்கா...

வரையும் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அழைக்கும் நடவடிக்கையில் கட்சியின் பிரதான செயலாளர் ஈடுபட்டுள்ளதாகவும், குறித்த கூட்டங்கள் தொடர்பாக கட்சித் தலைவரான தமக்கு அறிவித்தலோ அழைப்புகளோ வழங்கப்படவில்லைஎனவும்,

இவ்வாறான நடவடிக்கையினால் கட்சியின் யாப்பு நேரடியாக மீறப்படுவதாகவும் சந்திரிகா குமாரதுங்கா கட்சியின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ச-4)

## ஜெனீவாக்...

செய்வதென்பது காத்திரமான ஒரு விடயம். சம்பந்தப்பட்ட தரப்பினரும் அனுசரணையாளரதும் இலங்கை ஜனாதிபதியினதும் விடுதலைப்புலிகளின் தலைவரினதும் ஒப்பங்களை பெற்றுச்செய்யப்படவேண்டிய விடயம்.

ஆனால் சட்டத்தரணி சில்வா சர்வதேச ஒப்பந்தம் ஒன்றினை அதன் தார்ப்பரியங்களை உணராது கருத்துக்கூறுகிறார். அவரது வாதம் தர்க்கரீதியானது அல்ல, வெறும் கற்பனையாகும்.

அவர் அரசியல் காரணங்களுக்காக அதாவது சிங்களக்கடும் போக்காளர்களை திருப்திப்படுத்துவதற்காக அறிக்கையை வெளியிட்டுள்ளார் என்றே நம்ப வேண்டி இருக்கிறது என அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (ச-6,4)

## துணைப்படை...

ஜெனீவாவில் விடுதலைப்புலிகள் தெரிவித்த குற்றச்சாட்டுக்களில் கிழக்கில் குறைந்த பட்சம் ஐந்து துணைப்படைக்குழுக்கள் இயங்குகின்றமை தெரியவந்துள்ளன.

அதற்குப் பதிலளித்த அரச தரப்பினர் அரச படைகளை தவிர வேறு எந்தக் குழுவே தனிநபரோ ஆயுதங்கள் வைத்திருப்பதை அனுமதிக்கப் போவதில்லையென உறுதியளித்திருந்தனர்.

இதேவேளை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் எத்தகைய உடன்பாடுகள் ஏற்பட்டாலும் தாம் தமது ஆயுதங்களை கைவிடப் போவதில்லையென கருணா அம்மான் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

கிழக்கில் கருணா குழுவினர் செயற்படுவதை இந்த அறிக்கையும் அத்தாட்சிப்படுத்துகின்றது என ஹொக்லண்ட் தெரிவித்தார். (ச-6)

## பேச்சுவார்த்தை...

அவை தொடர்பான அக்கட்சியின் கருத்துக்களை அறிந்துகொள்வதற்காக இந்த மாநாட்டினை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த சர்வகட்சி மாநாட்டிற்கு தமிழ்தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதத்தலைவர்களுக்கும் அழைப்பு விடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஜனாதிபதி செயலகம் ஈடுபட்டுள்ளது.

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்னதாக இரு சர்வகட்சி மாநாடுகள் நடைபெற்றன.

இதில் ஒரு மாநாட்டில் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதற்கான இடம் பற்றிய தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

## ஹக்கீம்...

செயலாளர் சார்பாக நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை பரிசீலனைக்கு எடுக்கப்பட்டபோதே நீதிமன்றம் இத்தீர் மானத்தை அறிவித்தது.

கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி தேவிகா தென்னக்கோன் முன்னிலையில் இவ்விடயங்கள் பரிசீலிக்கப்பட்டபோது தடை உத்தரவினை நீக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

கடந்த பெப்பிரவரி 15 ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிபதி கே.எச். சுமத்திரபால, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப்ஹக்கீம் மற்றும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஆகியோருக்கு எதிராக இத்தடை உத்தரவினை வழங்கியிருந்தார்.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த கட்சி உறுப்பினர் ஒருவர் தலைமைத்துவத்தின் அதிகாரத்திற்கு எதிராக தாக்கல் செய்த மனுவொன்றை பரிசீலித்தபோதே தடை உத்தரவு விதிக்கப்பட்டது. (ச-4)

# மரண அறிவித்தல்

## திருமதி மயில்வாகனம் தங்கம்மா

வேலணையைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம் ஆத்திசூடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா மயில்வாகனம் அவர்கள் நேற்று 01.03.2006 புதன் கிழமை இரவு காலமானார்.

அன்னார் திரு.திருமதி சங்கரப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும் திரு.திருமதி சின்னத்தம்பியின் மருமகளும் காலஞ்சென்ற க.சி.மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் பொன்னம்மா, இராசையா, சடாசிவம், தம்பு, மனோன்மணி ஆகியோரின் சகோதரியும் அன்னலெட்சுமியின் மைத்துனியும் நாகேஸ்வரி, சரஸ்வதி, சிவம் (சிவசயானி நகையகம்), யோகேஸ்வரி (சோளாவத்தை-உப அஞ்சல் அதிபர்) ஆகியோரின் தாயாரும் சிவலிங்கம்(ஓய்வு பெற்ற ஆசிரியர்), இராமச்சந்திரன் (இந்திரன்-லண்டன்), கணேசமூர்த்தி (மண்டைதீவு), இந்திரா(புளியங்கூடல்) ஆகியோரின் மாமியாரும் அமிர்தினி(கனடா), அரவிந்தன்(பொறியியலாளர்), குகப்பிரியன், கௌசல்யா, நிருஜன், ஜெசிகீசன், சரணியா, சயானி ஆகியோரின் பேர்த்தியும் றிவியாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 02.03.2006 வியாழக்கிழமை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

66/14 ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்;
ம.சிவம்(மகன்),
சிவசயானி நகையகம்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# கடற்படையினர்-ஆசிரியர்கள் மடத்துவெளியில் நேற்று முறுகல் நிலை

## வாக்குறுதி நிறைவேற்றப்படாததையடுத்து

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மடத்துவெளிக் கடற்படைச் சோதனைச் சாவடியில் நேற்றுப் பிற்பகல் ஆசிரியர்களுக்கும் கடற்படையினருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

எனினும் 45 நிமிட நேரத்தின் பின்னர் நிலைமை சீராகியது. யாழ்.இராணுவத் தளபதியினால் மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கெதிராக கடற்படையினர் செயற்பட்டதாலேயே இம் முறுகல் நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது;

நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த ஆசிரியர்களை வழமைபோன்று பஸ்ஸிலிருந்து இறங்கி சோதனை சாவடியைத் தாண்டிச் சென்று நிற்குமாறு புங்குடுதீவு மடத்துவெளிப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் உள்ள கடற்படையினர் பணித்தனர். அதற்கு எதிர்ப் புத் தெரிவித்த ஆசிரியர்கள் அரச ஊழியர் களை பஸ்ஸிலிருந்து இறக்காதிருக்க சோதனை மேற்கொள்ளுவதற்கு யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திர சிறி மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளதாகவும் அதனடிப்படையில் தாங்கள் இறங்காமலிருக்க சோதனைகளை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தினர்.

எனினும் அவ் வேண்டுகோளை ஏற்க மறுத்த கடற்படையினர் தமக்கு அது குறித்து எதுவித அறிவித்தலும் கிடைக்கவில்லையெனத் தெரிவித்ததுடன் பஸ்ஸிலிருந்து இறங்க மறுத்த ஆசிரியர்கள் அனைவரையும் சுமார் 45 நிமிட நேரம் தடுத்து வைத்திருந்தனர்.

இதனையடுத்து உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த கடற்படையின் புங்குடுதீவு மக்கள் தொடர்பக அதிகாரி, ஆசிரியர்களிடம் பேசி சமரச முயற்சியில் ஈடுபட்டார்.

இதனையடுத்து ஆசிரியர்கள் பஸ்ஸிலிருந்து இறங்கி நிற்க கடற்படையினர் பஸ்ஸை சோதனையிட்ட பின்னர் பயணத்தை மேற்கொள்ள அனுமதித்தனர். தீவுப் பகுதிக்குப் பயணம் மேற்கொள்ளும் மக்கள் பண்ணைச் சந்தி, அல்லைப்பிட்டிச் சந்தி மற்றும் புங்குடுதீவு மடத்துவெளிப் பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களில் கடற்படையினால் சோதனை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-4.5)

# பல்கலைக்கழகம் ஆரம்பிப்பது குறித்து துணைவேந்தருடன் நேற்று ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

கல்விச் செயற்பாட்டை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று அறிவிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளுக்கும் துணைவேந்தர், துறை ரீதியான தலைவர்கள்,பதிவாளர், பீடாதிபதிகள் ஆகியோருக்குமிடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.இச் சந்திப்பின் போது மாணவர்களது கல்விச் செயற்பாட்டை ஆரம்பிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. கற்பதற்கான சூழல் இன்னமும் ஏற்படவில்லை எனவும் தொடர்ந்தும் மாணவர் மத்தியில் பெரும் அச்சநிலை காணப்படுவதால் கல்விச் செயற்பாட்டை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் மாணவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது முடிவு குறித்து அனைத்துப் பீட மாணவர்களிடமும் கலந்தாலோசித்த பின்னர் இன்று தெரிவிக்கவுள்ளதாக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (ச-132,133)

## அயல் வீட்டு...

தில் முடிவடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அயல் வீட்டுப் பெண்ணினால் தனது தாய் கத்தியால் குத்தப்படுவதைக் கண்ட பிரஸ்தாப் பெண்ணின் மகள் அவரைக் காப்பாற்றச் சென்றபோது அவரும் கத்திக் குத்துக்கு இலக்கானதாக தெரிவிக்கப்பட்டது.

கத்திக்குத்துக்கு இலக்கான பெண்ணின் சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை கத்திக்குத்தினை மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் அயல் வீட்டுப்பெண் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டார். (ச-5)

## ஜெனீவாப் பேச்சின்...

நிலையானது இரண்டு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசையில் அமர்த்தியுள்ளது என ரொம்நெர்ஸ்சொக் தெரிவித்தார்.

சமாதானமும் மக்கள் சேவைக்குமான அமைப்பு புத்தளத்தில் நேற்று நடாத்திய செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார். ஜெனீவாப் பேச்சுவார்த்தையானது நிரந்தர சமாதானத்திற்கான அடித்தளம் ஆகும்.

இந்த முதற்கட்டப் பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் குறித்து நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். இலங்கையில் வாழும் சகல சமூகங்களும் எதிர்பார்க்கும் சமாதானத்திற்கான அனுசரணையாளார்களாக நோர்வே செயலாற்றி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## முன்னாள்...

ரன், லக்ஷ்மன் செனவிரத்தின ஆகியோரையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச நிர்வாக சுதேச விவகார அமைச்சின் நிறுவனப் பணிப்பாளர் நாயகம் பீ.பி.கருணாரட்ண முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக அரச உத்தியோக பூர்வ இல்லங்களை மீளப் பெறல் சட்டத்தின் கீழ் தொடர்ந்த மூன்று வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த முன்னாள் அமைச்சர்களோ அவர்களைச் சார்ந்தவர்களோ இந்த வீடுகளில் இருந்தால் அவர்களை வெளியேற்றி விட்டு அந்த வீடுகளை மீண்டும் அரச நிர்வாக அமைச்சிடம் கையளிக்குமாறு இந்த மூன்று வழக்குகளிலும் கோரப்பட்டுள்ளது.

இந்த மூவரினதும் அமைச்சுப் பதவிகள் தற்போது இல்லாததால் அந்தஇல்லங்களில் வசிப் பதற்கு அவர்களுக்கு அனுமதி இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 02.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.